stered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# ஈழநாடு

மிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 18 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 02 (01.05.2006) திங்கட்கிழமை இதழ் 213

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# லிகள் திடீர் பாய்ச்சல்!

## கருணாகுழு முகாம்கள் துவம்சம்
## 29 பேர் பலி - ஐவர் சிறைபிடிப்பு!



க்கு தயாராகும் போராளிகள்



கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் ஒரு பகுதி

படங்கள்: என்.ரி.ரி.
(மேலும் படங்கள் 11 ஆம் பக்கத்தில்)

வ மாவட்டத்திலுள்ள வெலிக் சத்தில் கருணாகுழுவினரின் கள் மீது விடுதலைப் புலிகளின் டிப்படையணியினரால் மேற் தாக்குதலில்-கருணாகுழுவைச் சேர்ந்த 29 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 9 பேர் படுகாயமடைந்தனர். ஐந்து பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானுவின் நேரடி நெறிப்படுத்தலில் - வெலிக்கந்த பிரதேசத்திலுள்ள காசங்குளம், கண்டகாடு, தீவுச்சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த கருணாகுழுவின் முகாம்கள் மீது (12 ஆம் பக்கம் பார்க்க)

## ளவு ஆயுதங்கள் மீட்பு

## கிழக்கிலிருந்து போராளிகள்

## ளவு ஆயுதங்கள் மீட்பு

கருணாகுழுவின் முகாம்கள் மீது நேற்று விடுதலைப் புலி
த் தாக்குதலில் பெருந்தொகையான இராணுவத் தளபாடங்
ட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ல்.எம்ஜிக்கள்-02,81 மில்லி மீற்றர் மோட்டார்-01, ஆர்.பி.
.எம்.ஜிகள்-02, ரி56 ரக துப்பாக்கிகள்-16, கைத்துப்பாக்கி
தொடர்புக் கருவி-01 ஆகியன (12 ஆம் பக்கம் பார்க்க)

## ங்கள், வர்த்தகர் மீட்பு

ல் நேற்று தாக்கியழிக்கப்பட்ட கருணா குழுவின் முகாமிலி
கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள்
கனங்கள் இரண்டும் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன.
மாதம் 30, 31 ஆம் திகதிகளில் வெலிக்கந்தவில் வைத்து
வுக் கழகப் பணியாளர்கள் பத்துப் பேர் கடத்தப்பட்டநிலையில்
ரின் நிலை இன்று வரை தெரியவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படி மாணவிகள்
## பேருக்கு 10 'ஏ'

வெளியான க.பொ.த .சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில்
ரி கல்லூரியில் 15 மாணவிகள் பத்துப்பாடங்களி லும் 'ஏ'
துள்ளனர்.
க்கிழமை வெளியான க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறு
ாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில்
ன்னணி பாடசாலைகள் சிலவற்றில் சித்தியடைந்த மாண
யர் பெறுபேறுகளை பெற்ற மாணவர்களின் விபரங்கள்
இந்த விபரங்கள் 2 ஆம் பக்கத்தில்.

# கிழக்கிலிருந்து போராளிகள் கடல் வழியாக வன்னிக்கு!

கிளிநொச்சி —

கிழக்குப் பிராந்தியப் போராளிகள் நேற்றிரவு கடல்வழியாக முல்லைத் தீவை வந்தடைந்ததாக புலிகள் இன்று அதிகாலை வெளியிட்ட செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

நேற்றுமாலை ஐந்து மணிக்கு எமது கிழக்கு மாகாணப் போராளி களை ஏற்றிவருவதற்காக முல்லைத் தீவிலிருந்து திருகோணமலை நோக் கிப் புறப்பட்ட கடற்புலிகளின் படகுகளை இலங்கை கடற்படையினர் வழிமறித் துத் தாக்குதல் நடத்தினர்.

அப்போது கொக்குளாய், கொக் குத்தொடுவாய் ஆகிய முகாம்களிலில் இருந்தும் எமது படகுகளை நோக்கித் தாக்குதல் நடத்தப்பட் டது.

கடற்படையினரின் கடற்படைப் படகுகள் மீதும் கரையிலிருந்த இரா ணுவ முகாம்கள் மீதும் எமது படகு களிலிருந்து போராளிகள் பதில் தாக்கு தலை நடத்தியபின் தமது பயணத் தைத் தொடர்ந்தனர்.

திருகோணமலையைச் சென்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொக்கிளாய் தாக்குதலில் 4 படையினர் உயிரிழப்பு?

கொழும்பு —

கொக்கிளாய் இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக உத்தியோகப்பற்றற்ற செய்தி ஒன்று தெரிவித்தது.

நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து நள் ளிரவுக்குப் பின்னரும் அப்பகுதிகளில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்று வரு வதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றிரவு 7.05 மணியளவில் விமானப் படையினரின் எம்.ஐ.24 ரக ஹெலிகொப்டர் தாக்குதலில் ஈடு பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புல்மோட்டை மருத்துவமனையில் ஒரு பெண் உட் பட 5 பொதுமக்கள் காயமடைந்த நிலை யில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மருத் துவமனையைச் சேர்ந்த பிரசன்னா சில்வா கூறியதாக லக்பிம செய்தியா ளர் ஆர்.ஜி. தர்மதாச தெரிவித்தார்.

இந்த மோதலுக்குப் பின்னர் படகு மூலமாக 200 குடும்பங்கள் புல் மோட்டை முஸ்லிம் பாடசாலைகளில் அகதிகளாக அடைக்கலமாகியுள்ள தாக புல்மோட்டை பொலிஸ் பொறுப் பதிகாரி நெலும் பெர்னாண்டோ தெரி வித்தார்.

# க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் முன்னணி பாடசாலைகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்—

க.பொ.தசாதாரணதரப்பரீட்சையில் பத்துப் பாடங்களிலும் ஏ தரத்தில் சித்தி யடைந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணி பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் வெளி யிடப்பட்டுள்ளன அவை வருமாறு -

### 10 பாடங்களில் ஏ சித்திபெற்றோர் யாழ்.மாவட்டம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், இரஜிக்காந், செல்வி பரிமலராஜா, சச்சிதானந்தம் சுவர்ணா.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில், இஸ்வரஜனனி கருணைலிங்கம், சிறிவள்ளி சிவலிங்கம்.

யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியில், இரட்ணகுமார் கோபிநாத், டல்சினி கிருபாநந்தன்.

யாழ்.இந்துக் கல்லூரியில், முருகதாசன் பார்த்தீபன், சத்தியசீலன் செந்தில்குமரன், சரவணப்பெருமாள் பரணீதரன், சுந்தரராஜா விசாகன், பரமநாதன் நிரோசன்.

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடத்தில், செலஸ்ரின் பிரேமராஜா, மேரி ரொக்சியா.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் - கேசினி முத்துக்குமாரசாமி, கிருத்திகா மகேந்திரன், அபர்ணா ஜெகநாதன், நிரோசி கந்தசாமி, தனுசியா திருபுவனேஸ்வரன், ரம்மியா சிவராஜசுந்தரம், தர்சிகா பாஸ்கரன், கார்த்திகா அமிர்தலிங்கம், வாணிசிறி செல்வ கணேசபிள்ளை, காயத்திரி தனபாலசிங்கம், யசோதரா பேரின்பநாதன், லக்ஸ்சாஜினி பரிபூரணநாதன், சர்மிளா கிட்னேஸ்வரன், தர்சினி உருத்திரகோடீஸ்வரன், பவித்திரா கமலநாதன்.

இடைக்காடுமகா வித்தியாலயத்தில்- பாலசிங்கம் தர்சன்,

கந்தரோடை மகா வித்தியாலத்தில், கருணாகரன் பிரதீபா.

வட்டுக்கோட்டைஇந்துக் கல்லூரியில் - இராமகிருஸ்ணன் சயனுதா,

இராமநாதன் கல்லூரியில்- அருநந்திசிவம் சர்மிகா,

விக்ரோறியாக் கல்லூரியில், குலரட்ணராஜா கனகரூபன், சொரூபிகா குணதிலகம்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் - யோகராஜா கேசவன், துளசிகா செல்வராஜா, சத்தியா கதிர்காமநாதன், கேமச்சந்திரா பரமேஸ்வரன்,

ஹாட்லிக்கல்லூரியில் - கணபதிப்பிள்ளை வாகீசன், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் - கௌசிகா கணேசன்,

மெதடிஸ் பெண்கள் உயர் கல்லூரியில் -

குணச்சந்திரன் தர்சினி, சக்திவேல் கார்த்திகா, சிவசுவாமி வாகினி, பிரான்சிஸ் மதுசா, வல்லிபுரம் கிருஸ்ஞானந்தி,

யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில்- ஜனனி குமாரசாமி,

காரைநகர். கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் பாலசுப்பிரமணியம் பாஸ்கரன், சுகதா சத்தியேந்திரன் யாழ்.மாவட்டத்தில் 10 பாடத்திலும் ஏ தரத்தில் சித்தியடைந்தனர்.

ஆழியவளை சி.சி.ரீ.எம் வித்தியாலத்தில் - சிவபாலன் சத்தியவரதன் 9 ஏ எஸ்,

### முல்லை.மாவட்டம்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் - தவராசா இளங்கோ, தாட்சாயினி சிவலிங்கம், டக்சியா வேலாயுதம், அனுஜா யோகநாதன் ஆகியவர்கள் 10 ஏ, சந்திரராசா சுகிதரன் 9ஏ சி, பானுப்பிரியா கமலநாதன் 8ஏ பி சி, டோகினி சிவபாதம் 8 ஏ பி எஸ், மதுரா கருணாகரன் 7ஏ 3பி.

வித்தியானந்தாக் கல்லூரியில் - இராமநாதன் தேவினி 10ஏ, சூரியகுமார் பிந்துசா 8 ஏ 2பி, மகேஸ்வரன் கார்த்திகா 7 ஏ2 பிசி.

யோகபுரம் மகா வித்தியாலயத்தில் - சண்முகநாதன் துவாரகா 9 ஏபி, வேலும்மயிலும் கிலக்சா 7ஏ3பி பெற்றுள்ளனர் செம்மலை மகா வித்தியாலயத்தில், கணேசலிங்கம் நிசாந்தன் 8 ஏ பி சி.

குமுழமுனை மகாவித்தியாலயத்தில் - வருணா னந்தராஜா வாணிதரன் 9 ஏ பி, தியாகராசா சர்மிளா 7 ஏ பி சி எஸ்.

மல்லாவி மத்திய கல்லூரியில்- இராமலிங்கம் பமினா 7 ஏ 2சி எஸ், புண்ணியமூர்த்தி கஜேந்திரன் 6 ஏ 2சி 2 எஸ், யோகேஸ்வரன் மயூரன் 9 ஏ எஸ்.

கற்சிலைமடு தமிழ் கலவன் பாடசாலையில் - வன்னியசிங்கம் ஆதவன் 6 ஏ 3பி சி, சுந்தரமூர்த்தி செந்தூரன் 6 ஏ 3பி எஸ்.

கலைமகள் வித்தியாலத்தில், - கேதராணி கனகசபாபதி 8ஏ பி சி, லிகலியா விஸ்வலிங்கம் 6ஏ பி 3சி, தர்சிகா சிவசிதம்பரம் 6ஏ 3பிசி, சிறிஸ்கந்தராசா அகிலன் 6ஏ பி சி 2 எஸ்.

### கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மகாவித்தியாலத்தில், பாலச்சந்திரன் தனதீபன், மகேஸ்வரன் ரஜிதன், அமிர்தலிங்கம் அனுருத்தன் ஆகியோர் 10 ஏயும், சோபியா கலேந்திரன் 9 ஏ.பி,நடராஜா யாதவன் 8 ஏபிசி.

பளை மத்திய கல்லூரியில், - கேதீஸ்வரநாதன் ஜனகசிவசுதன் 7 ஏ பி சி, மத்திய கல்லூரியில் செல்வரட்ணம் சிவகனேசன் 8 ஏ 2பி,

பூநகரிநல்லூர் அ.த.க பாடசாலையில் - தியாகேசன் குமணன் 8 ஏ 2 பி,

பூநகரி மகா வித்தியாலயத்தில் மகேந்திரராசா றோகிலன் 8 ஏ 2பி,

இராமநாதபுரம் மேற்கு அ.த.க வில் தங்கராசா தர்சியா 7ஏ பி 2சி,

உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் - குணசிங்கம் கபிலா 7ஏ பி சி எஸ்,

திருவையாறு மகாவித்தியாலயத்தில் பூலோக நாதன் பிரமிளா 7ஏ பி 2சி, ஜெயரட்ணம் துளசி 7ஏ 2பி சி,

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் - முருகவேள் துளசிகா 8ஏ 2பி,

சிவநகர் அ.த. கவில் ஜெயராஜா சஞ்சயன்8ஏபிசி, இராமநாதபுரம் ம.வியில் - பசுபதிப் பிள்ளை கஜன் 9ஏ சி,

கிளிநொச்சி இந்துக்கல்லூரியில்- திரவியச் செல்வன் ஸ்ரீரஜீவன் 9 ஏ பி,

கனகபுரம் ம.வியில் நாகேஸ் பிரதீசன் 7 ஏ 2பி எஸ்,

அக்கராயன்அ.த.கவில் முருகானந்தன் றஜீகா 8 ஏபிசி, இராமச்சந்திரன் சுதர்சன்7ஏபிசி எஸ் பெற்றுள்ளனர்.

# மின்சாரம் தாக்கி மாணவன் மரணம்

சங்கானை—

வட்டுக்கோட்டைப் பகுதியில் மின்சாரம் தாக்கி மாணவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று மாலை வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் அன்னலிங்கம் தரணிதரன் (வயது 16) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவர். தனது வீட்டுக்கு அருகில் இருந்த காணியில் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தவேளை தென்னை மரத்தில் கட்டப்பட்டிருந்த மின்சார கம்பியில் இருந்து ஏற்பட்ட மின் ஒழுக்கினால் மாணவன் உயிரிழந்ததாக தெரிய வருகிறது.

அறுந்திருந்த மின்சாரக்கம்பி கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த தென்னை மரத்தில் கட்டப்பட்டிருந்தது என்றும், இதனால் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் குறித்த இளைஞன் உயிரிழந்தார் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(43)

# சுற்றிவளைப்பு தேடுதல் குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக இராணுவத்தினரின் சுற்றிவளைப்புத் தேடுதல்களும், சோதனை நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

குறிப்பாக யாழ்.நகரப்பகுதி யெங்கடுமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு வீதியால் பயணிக்கும் பொதுமக்களையும் கடுமையான சோதனைக்குள்ளாக்கி வருகின்றனர்.

இதேவேளை, நேற்று இணுவில், காரைக்கால் மற்றும் 4ஆம் கட்டை ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் திடீரென சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது அப்பகுதி எங்கும் பவள் கவச வாகனங்கள் சகிதம் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீடுவீடாக கடுமையான சோதனைகளும் மேற்கொண்டதோடு, இளைஞர்களை கடுமையான சோதனைக்குள்ளாக்கி மிரட்டியுள்ளனர். இத்தேடுதல் நடவடிக்கையின் போது இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கடுமையான விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

# படையினரின் வீதி, வேகத்தடைகளால் பயணிகளும், சாரதிகளும் சிரமம்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் இராணுவமுகாம்களுக்கு முன்பாக போடப்பட்டிருக்கும் வீதி மற்றும் வேகத் தடைகளால் பொதுமக்களும், வாகனசாரதிகளும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களை அடுத்து படையினர் தமது முகாம்களின் முன்பாக வேகத்தடைகளையும்,வீதித்தடைகளையும் அமைத்து வருகின்றனர்.

முகாம்களுக்கு முன்பாக வீதிகளுக்கு குறுக்கே போடப்பட்டிருக்கும் மண் அணைகளினால் அந்தவீதிகளினூடாக பயணம் செய்யும் மக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பாரங்களுடன் சைக்கிள்களில் செல்லும் வியாபாரிகள் உயரமாக அமைக்கப்பட்டிருக்கும் மண் அணைகளை கடந்து செல்லும்போது விபத்துக்குள்ளாகி வருகின்றனர். அத்துடன் வீதிகளூடாகச் செல்லும் வாகன சாரதிகளும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

வீதிகளுக்கு குறுக்கே மரத்தடிகளால் அமைக்கப்பட்டு சிறிய தூர இடைவெளியில் வைக்கப்பட்டிருக்கும் வேகத் தடை களுக்கூடாக செல்லும் போது வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதித்தடைகளை கடந்து செல்லும்வேளைகளில் குறித்த வேகத்தடைகளில் முட்டிச் செல்லும் வாகனச்சாரதிகள்படையினரால்கடுமையாக தாக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்தவாரம் படையினர் வீதிக்கு குறுக்கே வெட்டிய பாரிய குழிகள் நிரப்பப்பட்டு மண் அணைகளாக போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

படையினரால்புதிதாக அமைக்கப்பட்டுள்ள வேகத் தடைகளை அகற்றி மக்கள் இயல்பாக போக்கு வரத்தில் ஈடுபடுவதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன்நடவடிக்கைஎடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மீன்களின் விலை வீழ்ச்சி

பருத்தித்துறை—

வடமராட்சி பகுதிகளில் மீனின் விலை கடந்தசில நாட்களாக குறைவடைந்துள்ளது. கடந்த சில நாட்களாக ஏற்பட்டிருக்கும் காலநிலை மாற்றத்தையடுத்து பெருமளவான மீன்கள் பிடிக்கப்பட்டுவருவதாகவும், சந்தைகளில் மீனின் விலை குறைவடைந்துள்ளதாக தெரியவருகிறது.

# தபால் நிலையங்களில் பணத்தைப் பெறவசதி

கொழும்பு—

வெளிநாடுகளில் உள்ளவர்கள் தமது உறவினர்களுக்கு அனுப்பும் பணத்தைதபால் நிலையங்கள் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் தந்தி தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்தார்.

இதன்படி வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பணத்தை ஐந்து நிமிடங்களில் தபால் நிலையங்களூடாக பெற முடியுமெனவும், வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தை இலங்கை ரூபாவில் மாற்றும் வசதி தபால் நிலையங்களில்ஏற்படுத்திக் கொடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.


கலாலயா
பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித ஒரு மாத/மூன்று மாத பயிற்சிகள்

- கேக் ஐஸிங், உணவு தயாரித்தல்,கூந்தல் அலங்காரம் FABRIC PAINTING, பூவேலை, கைவேலை
- அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான சாறி பிளவுஸ் தைக்கும் முறை
- அடிப்படை FACIAL மற்றும் மணமகள் அலங்காரங்கள்
- 6 மாத கால தையற்கலை

புதிய சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் : 07.05.2006
புதிய கிழமைநாள் வகுப்புகள் ஆரம்பம் : 10.05.2006

மேலும் விபரங்களை தினமும் பி.ப.2 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

[C/5305]


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 10 1950

மறைவு 12 05 2005

திதி : பஞ்சமி - 02.05.2006

அமரர் தங்கவேல் வரதலட்சுமி

(அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை)

எமது அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 02.05.2006 அன்று அன்புத்திட்டம் 1 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி : [வரதலட்சுமி உணவகம்] அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
தற்காலிக முகவரி : அன்புத்திட்டம்,1 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

[C/5304]

17 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

01.05.2006

திரு.திருமதி.து.இராசரத்தினம் தம்பதியினரின் செல்வப்புதல்வி சாரதா

தனது 17 ஆவது பிறந்தநாளை இன்று (01.05.2006) திங்கட்கிழமை மாதகலில் உள்ள தனது இல்லத்தில்வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணாமார்கள், அக்கா, அண்ணி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும், நுணசை முருகன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

அண்ணா - இ.குகன்.

[2251]


நிறைஞ்னாஸ் சங்கானை
ஸ்ரீகாந்த், மீரா ஜஸ்மின் மற்றும் பலர் நடித்த
மெர்க்குரிப்பூக்கள்
கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்
திருப்பதி





காட்சி நேரம்0.30,2.30,6.30,9.30

ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு




ப.நேரம் : 10.30,230,6.30,9.30

# இயல்பு வாழ்வுக்கு திரும்பாத திருகோணமலை நகரப் பகுதி!

கொழும்பு—

திருகோணமலையில் கடந்த 15 நாட்களுக்கு மேலாக இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை.

கடந்த 12ஆம் திகதி சிங்களக் காடையர்களால் தமிழர்கள் வெட்டியும், எரித்தும் படுகொலை செய்யப்பட்டதையடுத்து, தொடர்ந்து அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவிவருகிறது.

பல வர்த்தக நிறுவனங்கள் பிற்பகல் 1 மணியளவில் மூடப்பட்டு விடுகின்றன. நகைக் கடைகள், புடவை மற்றும் பாதணிக் கடைகள் இன்னமும் மூடியே கிடக்கின்றன. பல வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

அந்த வீதிகளில் இராணுவத்தினரும், பொலிஸாரும் மட்டுமே ரோந்துப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

போக்குவரத்துகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் திரை அரங்குகள் மூடப்பட்டுள்ளன. அனைத்து கேளிக்கை நிகழ்வுகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. எதுவும் எந்த நேரத்திலும் நடைபெறலாம் என்ற நிலையில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு எப்படி அனுப்புவது என்று பெற்றோர்கள் பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

இரண்டாயிரம் மாணவர்கள் வரையிலான பாடசாலைகளில் 20 அல்லது 30 மாணவர்கள் மட்டுமே வகுப்புகளுக்கு வருகை தந்துள்ளனர். அவர்களும்கூட பாடசாலைக்கு அருகாமையிலுள்ள குடியிருப்புகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. பாடசாலை அதிபர்களும் பணிக்குச் செல்வதில்லை.

திருமலையில் பதற்றம் தணிந்து இயல்பு நிலைமை திரும்பினால்தான் மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைகளுக்குத் திரும்புவார்கள் என்று திருமலை கல்வித்துறையினர் கருத்துத் தெரிவித்தனர்.

## வட கிழக்கு தேர்தல் ஒத்திவைப்பு?

கொழும்பு—

வடக்கு - கிழக்கில் நிலவும் அமைதியற்ற சூழ்நிலையால் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாமென அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு பிரதேச சபை, காத்தான்குடி நகர சபை, கோரளைப்பற்று பிரதேச சபை, ஏறாவூர் நகரசபை ஆகியவற்றுக்கான தேர்தலே ஒத்திவைக்கப்படக்கூடும்.

வவுனியா நகரசபை வேட்பாளர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், பல பிரதேசங்களில் முப்படையினரால் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. இதனால் நேர்மையான தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரதேசங்களில் தேர்தல் நடத்துவது சம்பந்தமாக தேர்தல் அதிகாரிகளுக்கும், தேர்தல் ஆணையாளருக்குமிடையில் சந்திப்பு நடைபெற்ற பின்னரே முடிவெடுக்கப்படவுள்ளது.

## நாட்டின் நிலைமையை விளக்க சர்வகட்சி சபை

கொழும்பு—

இராணுவத் தலைமையகக் குண்டு வெடிப்பையடுத்து நாட்டின் நிலைமை குறித்து சர்வதேச சமூகத்துக்கு விளக்கமளிப்பதற்காக சர்வ கட்சி சபையொன்றை நியமிக்க ஜனாதிபதி மகிந்த தீர்மானித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளை இந்தச் சபையில் சேர்த்துக் கொள்வதற்கு மகிந்த முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக விரைவில் அந்தக் கட்சிகளின் தலைவர்களுடன் மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவத் தளபதி மீதான தாக்குதல் திட்டம் உயர்ந்த கட்டடத்திலிருந்து வகுக்கப்பட்டதா?

## குழப்பத்திலுள்ளனர் பொலிஸார்

கொழும்பு—

இராணுவத் தளபதி மீதான தாக்குதலுக்கான திட்டம் இராணுவத் தலைமையகத்துக்கு அருகாமையிலிருக்கும் உயர்ந்த கட்டடத்தில் வகுக்கப்பட்டிருக்கலாமென்ற சந்தேகம் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்வதற்காக பொலிஸ் இரகசியப் பிரிவின் சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் தற்போது இராணுவத் தலைமையகத்தை அண்டியிருக்கும் உயரமான கட்டடங்களுக்குச் சென்று விசாரணைகளை நடத்துவதாக இரகசியப் பிரிவினர் தெரிவித்தனர்.

இராணுவத் தலைமையகத்துக்கு அருகிலிருக்கும் சில கட்டடங்களிலிருந்து பார்க்கும்போது இராணுவ மருத்துவமனையின் முன்புறப் பாதை, குண்டு வெடிப்பு நடைபெற்ற இடம் ஆகியன தெளிவாகத் தெரிவதை அந்த அதிகாரிகள் கண்டுள்ளனர்.

மேலும் சில கட்டடங்களிலிருந்து பார்க்கையில் இராணுவத் தளபதி அலுவலகத்திலிருந்து வீட்டுக்குச் செல்லும் பாதை தெளிவாகத் தெரிவதையும் விசாரணை நடத்தும் குழுவினர் கண்டறிந்துள்ளனர்.

இதற்கமைய இந்தத் தாக்குதல் திட்டம் உயர்ந்த கட்டடத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்திருப்பதாக இரகசியப் பிரிவின் அதிகாரி தெரிவித்தார்.

இராணுவத் தளபதி பயணிக்கும் முறை, அவரின் செயற்பாடுகள் ஆகியவற்றை உயர்ந்த கட்டடமொன்றிலிருந்து அவதானித்த தாக்குதல் திட்டக்காரர்கள் அதன்படி தற்கொலைதாரியை தலைமையகத்துக்குள் அனுப்பியிருக்கலாமெனவும் சந்தேகிக்கின்றனர்.

தாக்குதலுக்கு சிறிது நேரத்துக்கு முன்னதாக தற்கொலைதாரியின் செல்போனுக்கு வந்த அழைப்பும், இத்தகைய உயர்ந்த கட்டடத்திலிருந்து திட்டங்களை வகுத்தவரினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இவையனைத்தும் சந்தேகங்களே என்றும், இவற்றைப் பற்றி விசாரணைகளை மேற்கொண்டு ஒரு இலக்கை அடைய முடியுமெனவும் இரகசியப் பிரிவினர் தெரிவித்தனர்.

## தற்கொலைதாரியின் இராணுவ கணவர் யார்?

கொழும்பு—

இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா மீதான தாக்குதலை நடத்திய தற்கொலைதாரியின் கணவர் இராணுவத்தைச் சேர்ந்தவரா என்பது குறித்து இரகசியப் பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தனது கணவர் இராணுவத்தில் பணிபுரிவதாகக் கூறி பலமுறை அந்தப் பெண் இராணுவ மருத்துவ மனைக்கு வந்து சென்றதாகக் கூறப்படுவதையடுத்தே இந்த விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்தனர்.


## கிளிநொச்சி நகரை தாக்கவே விமானப்படைக்கு உத்தரவாம்!

கொழும்பு—

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலையடுத்து படைத்துறைத் தலைமையகத்தால் விடுதலைப் புலிகளின் நிர்வாக ஆளுகைப் பகுதியான கிளிநொச்சி நகரின் மீதே விமானப் படையினரின் தாக்குதல் நடத்துவற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு சில நிமிடங்களில் படைத்துறைத் தலைமையகத்தால் கிளிநொச்சி நகரைத் தாக்காது திருமலையில் தாக்குதலை நடத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக படைத்துறைச் செயலக வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

# புலிகளுடன் தொலைபேசியில் பேசியதாகக் கூறுகிறார் ரம்புக்வெல



கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டதாக அமைச்சர் கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

விடுதலைப்புலிகளின் ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டரை தொடர்பு கொண்ட ரம்புக்வெல, பேச்சு மேசைக்கு விடுதலைப்புலிகள் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மேலும் விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண தளபதிகளின கிளிநொச்சி பயணத்துக்காக இரண்டு ஏயர் லங்கா கடல் விமானங்களை அரசாங்கம் வழங்க முன்வந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்குப்பதிலளித்த தயா மாஸ்டர், எந்த ஒரு விடயத்தையும் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாகத் தெரிவிக்குமாறு கூறியுள்ளார்.

மேலும் எந்த ஒரு யோசனையையும் விமானத் தாக்குதலை நிறுத்திய பிறகு தெரிவிக்குமாறும் அமைச்சரிடம் தயா மாஸ்டார் தெரிவித்துள்ளார்.

விமானத் தாக்குதலை நிறுத்தி விடுவதாகவும் அரசாங்கத்தின் யோசனையை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்துவிடுமாறும் ரம்புக்வெல பதிலளித்துள்ளார்.

இந்தத் தொலைபேசி உரையாடலை அரசாங்கத் தரப்பு உறுதிப்படுத்தியபோதும் விடுதலைப்புலிகளின் தரப்பு உறுதிப்படுத்தவில்லை.

கடந்த புதன்கிழமை தான் தொலைபேசியில் பேசியதாக ரம்புக்வெல கூறியுள்ளார்.

# முப்படைத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க கோரிக்கை

கொழும்பு—

திருமலை - மூதூரில் முப்படைகளும் நடத்திய தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய மனிதாபிமான உதவிகளை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சுவிஸிலுள்ள மனிதாபிமான தொண்டர் நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு ஆகியவற்றின் தலைமைப் பணிமனைகளுக்குச் சென்றிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைப் பணிப்பாளர் றெஜி, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனைத்துலகப் பணியாளர் நாகாநாகேந்திரன் ஆகியோர் மூதூரில் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை நிலைமையையும் எடுத்து விளக்கியிருக்கின்றனர்.

மூதூரில் 2 நாட்களாக நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளைக் கூட வழங்குவதற்கு தொண்டர் அமைப்புகளுக்குத் தடை விதித்த படையினரின் நடவடிக்கையால் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களை அவர்கள் விவரித்தனர்.

எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல்கள் நடைபெறாத வகையில் பார்த்துக்கொள்ளுமாறும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அனைத்துலக தொண்டர் அமைப்புகளிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

# 20 வீத மேலதிக கொடுப்பனவு

கொழும்பு—

க.பொ.த உயர்தரப் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடவுள்ளவர்களுக்கு 20 வீதமான மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர், ஊழியர் மற்றும் விடைத்தாள் திருத்துநர்களுக்கே 20 வீதத்தால் கொடுப்பனவு அதிகரிக்கப் படவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல் - கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை - விடைத்தாள் திருத்தும் நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவுள்ளது. இதனால் விடைத்தாள் திருத்தும் பணியை விரைவில் நிறைவு செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைகளில் பொறுப்புணர்வுடன் செயற்படும் ஆசிரியர்களுக்கே விடைத்தாள் திருத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணி 3 கட்டங்களாக நடைபெறவுள்ளதுடன் இதற்காக 18 ஆயிரம் பேர் கடமையில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோரில் 17 ஆயிரத்து 287 மாணவர்கள் பல்கலைக்கு

கொழும்பு—

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 17 ஆயிரத்து 287 பேர் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றுள்ளனர்.

மறுசீரமைக்கப்பட்ட இஸற் புள்ளிகளின் அடிப்படையில் மேலதிகமாக இரசாயனம் மற்றும் பௌதீக விஞ்ஞானத் துறைகளிலிருந்து 955 பேர் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முன்னர் வெளியிடப்பட்ட இஸற் புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எவருக்கும் மறுசீரமைக்கப்பட்ட இஸற் புள்ளிகளால் எந்தவித பாதிப்பும் ஏற்பட மாட்டாதென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தமுறை மருத்துவத் துறைக்கு ஆயிரத்து 139 மாணவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது. பல் வைத்தியத்துறைக்கு 84 மாணவர்களும், மிருக வைத்தியத்துறைக்கு 83 மாணவர்களும் அனுமதி பெற்றுள்ளனர்.


இதேபோன்றுபொறியியல்துறைக்கு ஆயிரத்து 240 மாணவர்களும், முகாமைத்துவத்துக்கு 2 ஆயிரத்து 252 மாணவர்களும், கலைப் பிரிவுக்கு 3ஆயிரத்து 590 மாணவர்களும், சட்டத்துறைக்கு 232 மாணவர்களுக்கும் அனுமதிகிடைத்துள்ளது.

மறு சீரமைக்கப்பட்ட இஸற் புள்ளிகளின் அடிப்படையில் 129 மாணவர்கள் புதிதாக மருத்துவத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த முறை அதிகளவான மாணவர்கள் மருத்துவத் துறைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதனால், ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் இன்னும் நான்கு மாதங்களில் நிறுவப்படவுள்ளதாக உயர் கல்வி பிரதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதேவேளை - தென்பகுதி சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்கள் விரும்பினால் வடக்கு- கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்களில் இடம் ஒதுக்கப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி விஜயசேகர தெரிவித்தார்.

இதேபோன்று, வடக்கு- கிழக்கிலுள்ள தமிழ் மாணவர்களுக்கும் தென்பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் இடம் ஒதுக்கப்படும். மறுசீரமைக்கப்பட்ட இஸற் புள்ளியால் எந்தவொரு மாணவர்களுக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது. பரீட்சை விடைத்தாள் திருத்தல் நடவடிக்கைகளில் இவ்வாறான பிழைகள் ஏற்படாது தடுக்க விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டி சமனிலையை நோக்கி நகர்வு



கேப்ரவுண் —

தென்னாபிரிக்க - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே கேப்ரவுணில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட் இழப்புக்கு 593 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

இரண்டாம் நாள் ஆட்டநேரமுடிவில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 535 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பிராங்ளின் 93 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

மூன்றாம் நாள் ஆட்டத்தை பிராங்ளினுடன், பட்டேல் இணைந்து ஆடினார். இதில் பிராங்ளின் சதத்தைப் பூர்த்தி செய்தார். நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 593 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

இதில் பிராங்ளின் 14 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 122 ஓட்டங்களுடனும், பட்டேல் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

தொடர்ந்து தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. சிமித்தும், டிப்பென்னரும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.


இதில் சிமித் ஸ்கோர் 36ஐத் தொட்ட போது 25 ஓட்டங்களுடன் பட்டேல் வீசிய பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அம்லா களமிறங்கினார். அவர் டிப்பென்னருடன் இணைந்து அணியின் ஸ்கோரை உயர்த்தினார். இந்த நிலையில் ^ பவுண்டரிகள் அடங்கலாக 47 ஓட்டங்களைப் பெற்றிருந்த டிப்பென்னரும், பட்டேலின் பந்தில் போல்டானார்.



அவரையடுத்து கலிஸ், அம்லாவுடன் இணைந்து அபாரமாக ஆடினார். இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 144 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, 7 பவுண்டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த கலிஸ், ஓரம் வீசிய பந்தை மார்ட்டினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பிறின்ஸ் களமிறங்கினார். அம்லா அபாரமாக ஆடி சதத்தைப் பூர்த்தி செய்தார். நான்காவது நாள் மதியபோசன இடைவேளை வரை தென்னாபிரிக்க அணி 3 விக்



கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் அம்லா 12 பவுண்டரிகள் அடங்கலாக 103 ஓட்டங்களையும், பிறின்ஸ் 9 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் பட்டேல் 2, ஓரம் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

விளையாட்டு

# பங்களாதேஷ் வீரருக்கு அபராதம் விதிப்பு

டுபாய் —

நடுவரின் தீர்ப்புக்கு அதிருப்தி தெரிவித்த பங்களாதேஷ் வீரர் சஹாரியர் நபீஸுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பதுல்லாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அப்போது, அவுஸ்ரேலியாவின் மைக்கல் ஜோன்சன் வீசிய வேகப்பந்தில் ஓட்டமெதையும் பெறாமல் நபீஸ் ஆட்டமிழந்தார். எல்.பி.டபிள்யூ கொடுத்து அவரை வெளியே அனுப்பினார் நடுவர். அவரது தீர்ப்புக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் நபீஸின் செயல்பாடு இருந்தது.

இது குறித்து கள நடுவர்கள் இயன் ஹோவல், நதீர் ஷா ஆகியோர் போட்டி நடுவர் ஜெஃப் குரோவிடம் புகார் அளித்தனர். அவர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நபீஸுக்கு ஆட்ட சம்பளத்தில் 20 சதவீதம் அபராதம் விதித்தார்.

# வடமராட்சி வலயமட்டத்திலான உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

வடமராட்சி —

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான உயற்பயிற்சிப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை ஹாட்லிக் கல்லூரியும், 2ஆம் இடத்தை இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், மூன்றாமிடத்தை குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை வட.இந்து மகளிர் கல்லூரியும், 2ஆம் இடத்தை மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையும், 3ஆம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

உடற்பயிற்சி போட்டிகளில் ஹாட்லிக் கல்லூரி தொடர்ச்சியாக 3 தடவைகள் சம்பியனாகியுள்ளதுடன், வடமராட்சி வலயத்திலிருந்து மாவட்ட மட்டப் போட்டிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 12 விளையாட்டுக்களிலும், ஹாட்லிக் கல்லூரி 7 விளையாட்டுக்களிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளதென வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார். (12)

# மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி

அன்டிகுவா —

மேற்கிந்தியத் தீவு - சிம்பாப்வே அணிகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவு அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவு அணி, சிம்பாப்வே அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

அதன்படி றிங்கியும், டபினும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர். இதில் றிங்கி ஸ்கோர் 5ஐத் தொட்டபோது ஒரேயொரு ஓட்டத்துடன் ரெய்லர் வீசிய பந்தை சிமித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து சிபாபா களமிறங்கினார். இருவரும் இணைந்து ஆடியவேளை, 26 ஓட்டங்களைப் பெற்றிருந்த டபின், சிமித்தின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து சிபாபாவுடன், ரெய்லர் இணைந்தார். அந்தவேளை, 5 பவுண்டரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களைப் பெற்றிருந்த சிபாபா



வும் சிமித் வீசிய பந்தை எட்வேட்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சிகும்புர 8 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட்டானார்.

இந்தநிலையில் ஸ்ரைடம் களமிறங்க, 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரெய்லர், பிறாவோ வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய டபெங்வாவும் 5 ஓட்டங்களைப் பெற்று பிறாவோவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மக்வயர் களமிறங்கினார். அந்தவேளை ஸ்ரைடம் 8 ஓட்டங்களைப் பெற்று கைலின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து களமிறங்கிய ஹிக்கின்ஸ் ஓட்டமெதையும் பெறாமல் கைலின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து உட்செயா களமிறங்க, 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த மக்வயர் ரெய்லரின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இறுதியாக ரெய்ன்ஸ்போர்ட் களமிறங்கினார். 50 ஓவர்கள் நிறைவில் சிம்பாப்வே அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

உட்செயா 2 ஓட்டங்களுடனும், ரெய்ன்ஸ்போர்ட் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர், பிறாவோ, சிமித், கைல் நால்வரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து 152 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற சுலபமான இலக்குடன் மேற்கிந்தியத் தீவு அணி களமிறங்கியது. கைலுடன், மோட்ரன் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கினார்.

இதில் ஸ்கோர் 1ஆக இருந்தபோது - 'ஓட்டமெதையும் பெறாதிருந்த மோட்ரன், ரெய்ன்ஸ்போர்ட்டின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து சர்வான் களமிறங்கினார். அவர் 14 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட்டானார்.

அவரையடுத்து ரம்டீன் களமிறங்க, 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த கைல், உட்செயாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சந்தர்போல் களமிறங்கினார். அவரும் 3 ஓட்டங்களைப் பெற்று உட்செயாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் லாறா களமிறங்கினார். இருவரும் ஸ்கோரை உயர்த்தியவேளை, 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரம்டீனையும், உட்செயா வெளியேற்றினார்.

அடுத்து பிறாவோ, லாறாவுடன் இணைந்து அணியின் வெற்றி இலக்கை எய்தினார்.


மேற்கிந்தியத் தீவுகள் அணி 38.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் லாறா 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 40 ஓட்டங்களையும், பிறாவோ 9 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் உட்செயா 3, ரெய்ன்ஸ்போர்ட் 1விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# லாறாவின் கப்டன் பதவிக்கு எதிர்ப்பு வலுக்கிறது

லண்டன் —



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு லாறா மூன்றாவது முறையாக சமீபத்தில் கப்டனாக நியமிக்கப்பட்டார். லாறாவுக்கு மீண்டும் வாய்ப்பு கொடுத்தது சர்ச்சையைக் கிளப்பியள்ளது.

அவரை கப்டனாக நியமித்தது தவறு என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் கொலின் கிராப்ட் கூறியிருந்தார்.

இதேபோல மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் கப்டன் றிச்சார்ட்சனும், லாறாவை கப்டனாக்கியதை ஏற்றுக்கொள்ளவில்லை. சர்வானுக்கு கப்டன் பதவி கொடுத்திருக்கவேண்டுமென்று அவர் கூறியுள்ளார்.

# மினி உலகக்கிண்ண கிரிக்கெட்; போட்டி அட்டவணை அறிவிப்பு

புதுடெல்லி —

8நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் கிண்ண கரிக்கெட் போட்டியின் அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

8 நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி இந்தியாவில் தொடங்கவுள்ளது. இந்தப் போட்டியில் மொத்தம் 21 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

லீக் ஆட்டங்களின் முடிவில் இரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெறும். முதல் அரை இறுதி ஆட்டத்தில் ஏ பிரிவில் முதல் இடத்தை பிடிக்கும் அணியும் பி பிரிவில் 2வது இடம் பிடிக்கும் அணியும் மோதும்.

2வது அரையிறுதி ஆட்டத்தில் ஏ பிரிவில் 2வது இடம்பிடிக்கும் அணியும் பி பிரிவில் முதல் இடம்பிடிக்கும் அணியும் பலப்பரீட்சை நடத்தும். இதன் இறுதி ஆட்டம் நவம்பர் மாதம் 5ஆம் திகதி மும்பையில் நடைபெறும். அனைத்து ஆட்டங்களும் பகல்-இரவாகவே நடைபெறவுள்ளன.

6 அணிகள் இந்தப்போட்டியில் ஆட நேரடியாகத் தகுதி பெற்றுவிட்டன. மேலும் இரண்டு அணிகள் தகுதிச் சுற்றுப்போட்டிகளின் மூலம் இந்தப் போட்டியில் பங்கேற்க தகுதி பெறும். இந்த தகுதி சுற்றுப்போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை, ஜிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன.

தகுதிச் சுற்று ஆட்டங்கள் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தகுதிச் சுற்று ஆட்டங்கள் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தகுதிச் சுற்றின் முடிவில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சம்பியன்ஸ் கிண்ணத்தில் ஆட தகுதி பெறும். அதாவது முதல் இடத்தைப் பிடிக்கும் அணி ஏ பிரிவிலும் 2வது இடத்தை பிடிக்கும் அணி பி பிரிவிலும் ஆடும்.

இந்தநிலையில் இந்தப் போட்டிக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் சபையும் இந்திய கிரிக்கெட் சபையும் இணைந்து அறிவித்தன.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியின் அட்டவணை விபரம் வருமாறு -

தகுதிச் சுற்றுப் போட்டிகள் -

ஒக்ரோபர் 7: இலங்கை - பங்களாதேஷ் (மொகாலி), ஒக்ரோபர் 8: மேற்கிந்தியத் தீவுகள் - சிம்பாப்வே (அகமதாபாத்), ஒக்ரோபர் :10 இலங்கை - சிம்பாப்வே (அகமதாபாத்), ஒக்ரோபர் 11: மேற்கிந்தியத் தீவுகள் - பங்களாதேஷ் (ஜெய்ப்பூர்), ஒக்ரோபர் 13: பங்களாதேஷ் - சிம்பாப்வே (ஜெய்ப்பூர்), ஒக்ரோபர் 14: இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் (மும்பை).


லீக் ஆட்டங்கள் -

ஒக்ரோபர் 15: இந்தியா - இங்கிலாந்து (ஜெய்ப்பூர்), ஒக்ரோபர் 16: நியூசிலாந்து - தென்னாபிரிக்கா (மும்பை) ஒக்ரோபர் 17: பாகிஸ்தான் - தகுதிபெறும் அணி 1 (ஜெய்ப்பூர்), ஒக்ரோபர் 18: அவுஸ்ரேலியா - தகுதி பெறும் அணி 2 (ஜெய்ப்பூர்) ஒக்ரோபர் 20: நியூசிலாந்து - தகுதி பெறும் அணி 1 (மும்பை), ஒக்ரோபர் 21 : அவுஸ்ரேலியா - இங்கிலாந்து (ஜெய்ப்பூர்), ஒக்ரோபர் 24: தென்னாபிரிக்கா - தகுதி பெறும் அணி 2 (அகமதாபாத்), ஒக்ரோபர் 25: நியூசிலாந்து - பாகிஸ்தான் (மொகாலி), ஒக்ரோபர் 26: இந்தியா - தகுதிபெறும் அணி 2 (அகமதாபாத்), ஒக்ரோபர் 27: பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா (மொகாலி), ஒக்ரோபர் 28: இங்கிலாந்து - தகுதி பெறும் அணி 2 (அகமதாபாத்), ஒக்ரோபர் 29: இந்தியா - அவுஸ்ரேலியா (மொகாலி), நவம்பர் 1: முதல் அரை இறுதி ஆட்டம் (மொகாலி).




இந்தியாவில் இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை நடைபெறவுள்ள மினி உலகக் கிண்ணப் போட்டிக்கான வெற்றிக்கிண்ண அறிமுக விழாவில் ஐ.சி.சி தலைவர் ஈசான் மானியும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சரத் பவாரும் வெற்றிக் கிண்ணத்துடன் காணப்படுகின்றனர்.

# டி.சிவராமின் கட்டுரைகள் நூல் வடிவில் வெளியீடு!




யாழ்ப்பாணம் —

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமின் தெரிவுசெய்யப்பட்ட கட்டுரைகளைக் கொண்ட நூல் ஒன்றை தமிழ் நெற் இணையத்தளம் வெளியிடவுள்ளது.

700 பக்கங்களில் 200 கட்டுரைகள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. டி.சிவராமின் முதலாம் ஆண்டு நினைவாக வெளியிடப்படும் இந்த நூல் ஜூன் 30 ஆம் திகதி வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தபால் செலவு உட்பட 55 டொலர் பெறுமதியான இந்த நூலைப் பெற விரும்புவோர் தமிழ்நெற் இணையத்தளம் மூலம் பதிவுகளைச் செய்யலாம். 250 பிரதிகள் மட்டுமே வெளியிடப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 7 அத்தியாயங்கள் இடம் பெற்றுள்ளன.

முதல் அத்தியாயத்தில் ஈழப்போர் I, இந்திய - இலங்கை போர் - 1976 - 1987, 1987 - 1990.

இரண்டாம் அத்தியாயத்தில் ஈழப்போர் II, 3 ஆம் அத்தியாயத்தில் ஈழப்போர் III, நான்காம் அத்தியாயத்தில் போர்நிறுத்த உடன்பாடு முதல் வருடம், 5 ஆம் அத்தியாயத்தில் போர்நிறுத்த உடன்பாடு 2 ஆம் வருடம், ஆறாம் அத்தியாயத்தில் போர்நிறுத்த உடன்பாடு 3 ஆம் வருடம், 7 ஆம் அத்தியாயத்தில் போர்நிறுத்த உடன்பாடு நான்காம் வருடம் ஆகிய தலைப்புக்களில் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபை இலவச மூக்குக்கண்ணாடிகளை 200 பேருக்கு வழங்கியது.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் கண்பார்வை குறைந்த ஒருவருக்கு மூக்குக்கண்ணாடியை அணிவிக்கிறார். (12)

## யாழ். இந்துக் கல்லூரியிலிருந்து 86 மாணவர்கள் பல்கலை அனுமதி

யாழ்ப்பாணம் —

யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து 2005ஆம் ஆண்டு க. பொ.த உயர் தரப் பரீட்சையில் தோற்றிய 86 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தெரிவித்தார்.

புதிதாக வெளியிடப்பட்ட வெட்டுப்புள்ளியின் அடிப்படையில், பொறியியல், மருத்துவம் ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொரு மாணவர்கள் கூடுதலாக அனுமதி பெற்றுள்ளனர்.

இதன்படி - பொறியியல் 19, கணிய அளவையியல் 4, பௌதிக விஞ்ஞானம் 16, பிரயோக விஞ்ஞானம் (பௌதிகம்) 2, மருத்துவம் 9, பல் மருத்துவம் 1, உணவு விஞ்ஞானமும் தொழினுட்பமும் 1, உணவும் போசாக்கும் 6, விவசாயம் 13, உயிரியல் விஞ்ஞானம் 5, விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும் 5, சித்தமருத்துவம் 2, முகாமைத்துவம் 2, கலை 1 என மொத்தம் 86 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

## இருபாலை கிழக்கு சிவன்கோவில் மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் —

இருபாலை கிழக்கு சிவன் கோவில் மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

## சைவநெறித் தேர்வுக்கான விண்ணப்பங்களை பெறலாம்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆண்டு தோறும் நடத்தி வரும் சைவநெறித்தேர்வு இந்த வருடமும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. இந்தத் தேர்வுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி மே மாதம் 19 ஆம் திகதியாகும்.

கடந்த வருடம் இந்தத் தேர்வுக்குத் தோற்றிய பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்வுக்குப் புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் இல 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாமென தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

# தந்தை செல்வாவின் கனவு தமிழர்களின் தாயக பூமியே

## மாவை எம்.பி தெரிவிப்பு



யாழ்ப்பாணம் —

தமிழர்கள் தமக்கென ஒரு தாயக பூமியை உருவாக்குவதன் மூலமே தந்தை செல்வாவின் கனவை நனவாக்க முடியுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை தந்தை செல்வாவின் சிராார்த்த நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பேரினவாத சிங்கள அரசு அடக்கி ஒடுக்கினாலும், சுதந்திர தாகம் கொண்ட தமிழர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்க முடியாது. போர்நிறுத்த ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்டு நான்கு வருடங்களாகியும்கூட, இந்தக் காலத்தில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பேரினவாத அரசு எத்தகைய அக்கறையும் காட்டவில்லை.

இந்த நிலையில் தமிழ்மக்கள் இனியும் ஏமாந்து விடப்போவதில்லை. தமிழர்கள் தமக்கென ஒரு தாயக பூமியை நிறுவும்வரை ஓயமாட்டார்கள். தமிழர்கள் தமது தாயகத்தை உருவாக்குவதன் மூலம் தான் தந்தை செல்வாவின் கனவை நனவாக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.



பன்னாலை சேர் கனகசபை அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பளைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் அதிபர் சி.சிவராஜன் மற்றும் விருந்தினர்களையும் படத்தில் காணலாம். (31)

# குருக்களின் சமயோசிதத்தால் திருட்டு முயற்சி முறியடிப்பு!

உடுவில் —

சங்குவேலியிலுள்ள இந்து ஆலய பூசகர் வீட்டுக்குள் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு புகுந்த திருடர்களின் திருட்டு முயற்சி வீட்டாரின் துணிச்சலான செயற்பாட்டால் முறியடிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலய குருக்களின் வீட்டுக்கு நள்ளிரவு 12 மணியளவில் சென்ற மூவர் வீட்டுக்கதவைத் தட்டிய போது திடீரென வீட்டார் அலவாங்கு, பொல்லுகளால் திருடர்களைத் தாக்கத் தொடங்கியதும், தாக்குதலை சற்றும் எதிர்பாராத திருடர்கள் தமது முயற்சியைக் கைவிட்டு தப்பியோடினர்.

திருடர்கள் வாள், பொல்லு, கத்தி என்பவற்றை வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து அயலவர்கள் அந்த இடத்தில் திரண்டு பல இடங்களில் தேடியபோதும் திருடர்களைப் பிடிக்கமுடியவில்லை.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரும் அந்தப் பகுதியில் குறித்த வீட்டில் நடத்தப்பட்ட திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (101)

# சின்னஞ்சிறு செய்திகள்

## வைத்தியசாலையில் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். போதனா வைத்தியசாலையில் யாழ்ப்பாண பொலிஸாரால் வயோதிபரின் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நல்லூர் காளி அம்மன் கோவில் அருகில் அநாதரவாக சடலம் ஒன்று கிடப்பதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

65 வயது மதிக்கக்கூடிய இந்த வயோதிபரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய மகோற்சவம்

உடுவில் —

உடுவில் மீனாட்சி சுந்தரரேஸ்வரர் ஆலய மகோற்சவம் நாளை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மறுநாள் சங்காபிஷேகமும், 9 ஆம் திகதி திக்கு விஜயமும், மறுநாள் புதன்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறமும் -

11 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு தேர் உற்சவமும், மறுநாள் காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருக்கல்யாண பூங்காவனமும் நடைபெறும். (101)

## நல்லை முதல்வருக்கு பொன்விழா நிகழ்வு

உடுவில் —

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் தற்போதைய குருவாகிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 50 ஆவது அகவை பொன்விழாவும், 25 ஆண்டுகள் சமயப்பணியில் ஈடுபட்டு வருவதையொட்டிய வெள்ளி விழா நிகழ்வுகளும் எதிர்வரும் ஜூன் மாதமளவில் நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சைவ சமய ஆர்வலர்கள், அபிமானிகள் இதற்கான சகல ஒழுங்குகளையும் தயார்படுத்தி வருகின்றனர். அன்றைய தினம் அவரை கௌரவிக்கும் முகமாக நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது. (101)

## தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம் —

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் தென்மராட்சி பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

# வலுவிழந்தோருக்கு 6 மாத கால பயிற்சிநெறி

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் வலுவிழந்தோருக்கான சித்திரம், ஓவியம், சிற்பம் தொடர்பான ஆறு மாத பயிற்சி இந்த மாத இறுதியில் நடத்தப்படவுள்ளது.

சமூக சேவை சமூக நலத்துறை அமைச்சின் ஏற்பாட்டின் பிரகாரம் யாழ். மாவட்டத்திலுள்ள வலுவிழந்தோருக்கே இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

16 வயதுக்கு மேற்பட்ட வலுவிழந்தோர், பிரதேச செயலகங்களிலும், சமூக சேவை உத்தியோகத்தர்களுடனும் தொடர்புகொண்டு இந்தப் பயிற்சிநெறியில் பங்குகொள்ளமுடியும். கடுமையாக வலுவிழந்தோருக்கு பயிற்சிநெறியில் பங்குபற்ற முன்னுரிமை வழங்கப்படுமென மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

## வட - கிழக்கு பாடசாலைகளில்

# பரிகாரக் கல்வி முறையை அமுல்படுத்த நடவடிக்கை!

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பின்தங்கிய நிலையில் காணப்படும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை அதிகரிக்கும்நோக்கில் பரிகாரக் கற்பித்தல் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாக மாகாண கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியும், இடைநிலைக் கல்வியும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் - மாணவர்களின் கல்வி நிலை அடைவுமட்டத்தை உயர்த்துவதற்காக இந்த நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் வட - கிழக்கில் 77 கோட்டங்களிலிருந்து 616 பாடசாலைகள் இந்தத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்படவுள்ளன.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

# General English Part (I)

## Part A - Grammer

**1.Complete the following table.**

| Adjectives | Adverb | Noun |
|---|---|---|
| ..................... | Ecstatically | Ecstasy |
| Eccentric | .................. | Eccentricity |
| Apprehensive | Apprehensively | .............................. |
| Anxious | Anxiously | .............................. |
| Courteous | ....................... | Courtesy |

(5marks)

**2. Underline the correct answer in the given sentences below.**

1) I was ( shocking, shocked) by her appearance.
2) Thats the most ( interested, interesting ) idea you, ve had today.
3) The lesson was deadly (boring,bored)
4) We were very ( irritating, irritated ) to hear that they weren't coming.
5) The results were (disappointing, disappointed) (5marks)

**3. Underline the word within the brackets that is most suitable for the blank in the sentence.**

1) Suresh went there ............................(on, with, by) my bike.
2) We travelled ....................................( in, on, by) Mr.Noels car.
3) There are two roads leading to the cottage, but this one is the ........................(shorter, shortest, shortening )
4) I was the man .......................................( who, whom, that ) they thought was dead.
5) This is one of the most interesting novel that ........................ ( have, has, hasn't ) appeared this year.
6) My friend is not to blame nor............................. (was, were, am) I.
7) The wages of sin .............................(is, were, are)
8) The committee...................................( is issused, has issued, have issused) its report.
9) The committee...................................( is divided, divided, are divided) on one minir point.
10) Neither praise nor blame.........................( seems, seem, seeming)to affect him. (10marks)

**4. Use the following conjunction to fill in the blanks of the given sentences. That, only, if, unless, since.**

1) Many things happened........................ I left the village.
2) The day is pleasant.................................. rather cold.
3) .................................... that is so, I am content.
3) ..................................... you work hard you wont succeed in life.
5) Not.................................. I loved History, but that I loved Philosophy more. (5marks)

**5. Write sentences which mean the same as the given sentences.**

**Ex: Sam and Peter are both twenty.**
**Sam is as old as Peter.**

1) John and Ravi are both five feet tall.
.....................................................................................
2) The suitcase and the bag both weigh 20 kilograms.
.....................................................................................
3) The diamond ring and emerald ring both cost rupees one millon.....................................................................
4) Rama and Rajiv are both brave boys.
.....................................................................................
5) Both his essay and the letter lengthy.
..................................................................................... (5marks)

## Part B - comprehension

**1. Read the following poem and answer the questions that follow.**

" There is not much that I can do.
For I ve money thats quite my own" Spoke the pitying child-
A little boy with a violin-
At the station before the train came in
"But can I play my fiddle to you,
And a nice one tis and good in tone"
The man in the handcuffs smiled;
The constable looked, and he smiled, too,
As the fiddle began to twang.
And the man in the handcuffs suddenly sang

With grimful glee,
This life so free
Is the thing for me

And the constable smiled, and said no word,
As if unconscious of what he heard
And so they went on till the train came in
The convict and the boy with the violin.

1) Where does the incident take place?
..................................................................... (1mark)
2) What is each person doing?
The boy..........................................................................
The constable..................................................................
The convict.....................................................................
3) Find words/ phrases in the poem which come close to the following in meaning
arrived =
happiness =
criminal =
unyielding = (4marks)
4) Why was the constable amazed? (2marks)
.....................................................................

**2. Read the following passage and answer the question that follow.** (15 marks)

### Quarrelling

In front of the house was a huge old ash tree. The west wind, sweeping from Derbyshire, caught the houses with full force, and the tree shrieked again, Morel liked it.

"Its music, he said, It sends me to sleep."

But paul and Arthur and Annie hated it. The winter of their first year in the new house their father was very bed. the children played in the street until 8 o'clock. Then they went to bed. Their mother sat sewing below. Having such a great space in front of the house gave the children a feeling of vastness and of terror. The terror came in from the shrieking of the tree and the anguish of the home discord.Often Paul would wake up, after he had been asleep a long time, aware of thuds downstairs. Instanly he was wide awake. Then he heard the booming shouts of his father, come home nearly drunk, then the sharp replies of his mother, then the bang,bang of his father's fist on the table. And then the whole was drowned windswept ash tree. The children lay silent in suspense, waiting for a lull in the wind to hear what their father was doing. He might hit their motheragain. There was a feeling of horror, a kind of bristling in the dark ness, and a sense of blood. They lay with their hearts in the grip of an inten se anguish. The wind came through the tree fiercer and fiercer.

And then came the horror of sudden silence. Silence,silence eery where, outside and dowmstairs.What was it? was it a silence of blood? what had he done?

The children lay and breathed the darkness and then, at last, they heard their father throw down his boots and tramp upstairs in his stockinged feet. Still they listened. Then at last, if the wind allowed, the water of the tap drumming into the kettle which their mother was filling for morning, and they could go to sleep in peace.

1) Why did Morel like the sound of the wind? (3 marks)
.....................................................................
2) Write down the sentence which denotes that the children didn't like the great space in front of the house? (3marks)
3) What made the children kept it suspense the whole night? (3 marks)
.....................................................................
4) What made the first sound? (1marks)
What did he do? (2marks)
.....................................................................
5) What is suggested by the sound of "The water of the tap drumming into the kettle"? (3 marks)
.....................................................................

## Part C - summarizing

**Write down the main idea of the following paragraphs in one sen tence, using 15-20 words.**

1) We all know how important "family" is in our lives. It is the foundation on which all meaningful relationships are based. It is the pivot on which stability, security, and love revolves. (3 marks)

2) In order to survive modern competition, business organizations have continually had to refocus their objectives. Thisdynamic rate of change has led to increase demand for newskills, better training and wider range of vocational studies. (3 marks)

**Summarize the following Passage of about one – third of the original length** (14 marks)

The British introduced plantation agriculture during the 19th century. After 1830, coffee, tea rubber and coconut estates sprang up all over the island. The government discouraged subsistence agriculture. Large number of pheasants gave up paddy cultivation. Some of them migrated to the towns. Some worked on the estates. Agriculture declined. As a result, Sir Lanka began to import rice from abroad. However, tea, rubber and coconut fetched high prices in the world market. The earnings helped to pay for the food imports. Therefore the economy was stable.Later other countries developed tea and rubber estates. As a result, tea and rubber prices fell. At the same time the growth of population continued. These affected the economy ad- versely. SriLanka's foreign assests declined and the cost of living rose steeply. (120 words)

## Part D – writing

1) Write out 2 personal noted for the following situations.

1) A friend of yours who has sat the A/L' S has sent you a set of noted and past question papers that are very useful to you. (5 marks)

2) Your friend Ravi, is absent from school today. You want to inform him that a revision class had been arranged for chemistry he next day. Ask him to be present tomorrow. (5marks)

2) In an inter school debating competition you are going to propose that "Including English as a subject in G.C.E. (A/L) examination is a blessing for future achievements"
On what points you are going to support your view?
(You should present at least 3 points using about 150 words) (15 marks)

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

# General English Part (II)

**A.1. Dialogue**

You are at the Katunayake International Airport awaiting the arrival of your friend from England by Singapore Airlines No.302. You wish to inquire the public relation officer(P.R.O) to check on the flight and the following con versation takes place. the part of your conversation.....

a) I'm affraid there is little delay.
b) Just a minute, I'll check up oh yes. She's son board.
c) Good bye
d) Yes, please
e) At 20.30 hrs
f) About an hour

You :- Excuse me. Is Singapore Airlines No 302 from London due here today?
P.R.O :- ..................................................................
You :- when is it due ?
P.R.O :- ..................................................................
You :- Is it on time?
P.R.O :- ..................................................................
You :- How long is the delay?
P.R.O :- ..................................................................
You :- Can you please tell me if Mr.Raj Shujith is on board the plane?
P.R.O.:- ..................................................................
You :- Thank you. Good Bye.
P.R.O :- ..................................................................

**B.2. Choosing suitable words from the given list. fill in the blanks.**

Orphan, mourners, advertisement, decade, autobiography, native, academic, foreign, biography

a) Universities provide for .............................. and professional courses.
b) A period of ten years is a ........................
c) The life history of a person written by himself is an....................
d) A child who has lost his parents is on ..............................
e) Good Wine needs no............................
f) People prefer........................... Goods to local ones.
g) People at a Funerals are..................
h) English is not a............................ language of Srilanka.

**C.3. Vocabulary**

Circle the meaning of the underlined phrases

1. "It's better we not tell our story"
"I think its quite dangerous to tell it out"
a) cause confusion b) cause public alarm c) cause a riot
2. "If we sign this treaty we take the responsibility to settle down the refu gees 'problems'
"How can we create an awareness of this"
a) promote dislike towards the problem b) promote attention towards the problems c) Create problems and criticisms.
3. "This is our last straw"
"What do you mean?"
"We are warned by the Principal not to abuse our privileges or we will be dismissed from school.
a) allowances b) opportunities c). facilities
4. "Definitely you can"
"Try and sew it"
"Sorry I'm not an expert in tailoring.
a) experienced person b) specialized person
c) A home science teacher
5. "what is the basic issue of this ethnic war
"Nobody knows but everyday is waiting for peace!
a) main idea b) main problem c) main result
6. "How are they bound together after their quarrel?"
"It's unbelie vable"
"They hated each other were'nt thay?"
a) come to an agreement b) joined hands
c) married so soon.
7. "We were so worried about the embarrassment we faced in front of my parents.
"Sure it was"
a) insult b) discomfort c) disrespect
8. "The reactions of the leaders are encountered by the people"
"Be prepared for the consequences
a) faced b) welcomed c) ignored
9. "It was a good willmisson made by the Pope
"Remember it"
a) appreciation b) reluctances c) contribution
10. "Banning a product from the market must be expressed with reasons"
a) promoting 2) prohibiting c) destroying

**C .4 Reading Comprehension**

*Read the following passage carefully before attempting any questions.*

**Censorship Considered**

Do you feel short changed or mildly insulted by the fact that some movies do not escape the scissors of our local censorship board? The discontinuity in the characters lines and plot action often presents itself as a stark reminder to the audience that the film is one which has been tampered with before its is beyond one's veiwing opponents of censorship often claim that the issue at hand is beyond one's veiwing pleasure. They feel that censorship limits a person's freedom of choice. A closer examination of censorship, however,will throw into relief the practical wisdom that underlies this common but cru cial practice in the regulation of social tolerance and morality.

Censorship is the supervision and control of information and ideas that are circulated among thepeople within a society. The ideology supporting cen sorship dates back to ancient times. Every society had customs ,taboos or laws by which speech, play,dress,religious observance and sexual expression were regulated. In modern times, censorship may be generally defined the examin ation of books, periodicals, plays, firms, television and radio programmes, news reports, and other communication media for the purpose of altering orsuppressing parts thought to the objectionable or offensive. objectionable material includes those that are considered **seditions** ortreasonable, immoral or obscene, heretical or blasphemous, or injurious to national security. The rationally for censorship is that is necessary for the protec tion of three basic social institutions-the family the church or religious body and the state. In other words, censorship takes into account the larger social context in which an individual lives.

Censorship was firmly established even in the most advanced democratic societies until the middle of the twentieth century. A **revolutionary** change in social attitudes and societal controls weakened the strength and existence of censorship in many democratic countries. However,all froms of censorship have not been universally elimtnated. For example, many people today still object to the 'new permissiveness' in the arts and mass media. They under stand that the circulation of potentially offensive and indiscreet material corrupts all sense of decency and civility, debases public taste and even undermines civilization. In non- democratic societies, censorship is a dominant and all - pervasive force, felt on all levels one's public and private life. Hardly any act, expression or relation ship is exempted from official surveillance and accountability. In this case, it is easier for one to see how censorship might be a bane to human rights.

In the Singaporean context, one might suggest that the practice of censor ship is a double-edged sword that functions to both liberate and suppress. Singapore's Multi - national multi-racial and multi-religious culture has evolved har moniously over the years precisely because censorship is the benchmark that up holds no single race or religon as the established order or ideology . Mutual toler ance becomes a necessity of life if a person wishes to maintain his autonomy without being infringed upon by others. In retrospect, censorship is an **indispensable** tool that has served our nation well. It has allowed us to boast of our unique constitution as one which is free from bloody religious and racial conflicts that have plague so many countries in the world today.

The local censorship board is an agent which draws the political, social and moral boundaries in Singapore. In general, when publishers, authors or broad casters are judges to have trespassed these boundaries, they are fined or imprisoned. IN some cases, tjere publications are confiscated or prohibited. Their medium of communication may also be closed to prevent recurrences. The general consensus is that these transgressions jeopradize the nation's security, and are a threat to the peace and moral standards of the community.

How ever, not all restrictions are dictated from above. In some cases as in the cinemas, some of the responsibilities were re- directedto the individual when Singapore implemented a system of film classification. The different ratings given to films actually demand a form of self- censorship by the individual. It also prepares the audience on what to expect in a film. Films under the 'U' or universal category are deemed suitable for veiwing by everyone,including children. On the other hand , films under the R(A) or resricted/ artistic category usually have adult themes and scenes of violence. The latter category seeks to protect teenagers and children form materials that are morally ambiguous or sexually explcit. The success of this form of censorship, How ever , really lies in the people's willingness to comply with the censership board's lesser intervention by exercising discretion in their choice of films.

**Answer the following question. You are recommened to answer them in the order set. Mistakes in punctuation, spelling and grammar may be penalized in any part of the papers.**

**From paragraph 1**

1.(a) What happens when a film is censored?
(b) What is the opponents' argument against censorship?

**From paragraph 2**

2. (a) Explain the function of censorship in our modern times.
(b) What does censorship protect?

**From paragraph 3**

3. (a) Why did censorship weaken in the middle of the twentieth century?
(b) What is the 'new permissiveness' in the arts and mass media?
(c) Explain Why censorship might be the bane to human right in non- democratic societies.

**From paragraph 4**

4. Give the opposite meaning of 'mitigate'

**From paragraph 5**

5. a) How dose censorship help maintain Singapore's status as a multi - na tional, multi - racial and multi - religious country?
b) How can we tell that censorship has served the nation well

**From paragraph 6**

6. a) What usually happens to publishers, authors or broadcasters when they trespass the censorship laws in Singapore?
b) What is the general consensus on such transgressions?

**From paragraph 7**

6. a) What do 'R(A)' films contain?
b) How may a person exercise self - censorship? You must answer in your own words.

**From the whole passage:**

8. Choose Five of the following words or phrases. For each of them give one word or short phrase (of not more than seven words) which has same meaning that the word or phrase has in the passage.

| | |
|---|---|
| 1. taboos | 5. bane |
| 2. seditions | 6. explicitly |
| 3. revolutionary | 7. indispensable |
| 4. all - pervasive | 8. jeopardize |

9. Write a summary of modern censorship its functions. USE ONLY THE MATERIAL FROM PARAGRAPH 1 to 6. Your summary, which must be in continuous writing(not note from), must not be langer than 160 words, including the 12 words given below. Begin your summary as follows.Censorship, though considered by some to be limiting, has mush practical wisdom...

PN. Shutharson Spl.Trd.Eng, Dip - in Eng, DETE
J/ Canagartnam M.M.V

# நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் மன்னாரில் 165 வீடுகள் அமைப்பு!

மன்னார்

மன்னார் மாவட்டத்தில் நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 165 வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் கே.ராஜரட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து தற்பொழுது தமது சொந்தக் கிராமங்களில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கே இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் -

மன்னார் பிரதேச செயலக பிரிவில் தலை மன்னார் கிராமத்தில் 20 வீடுகளும், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் எருவிட்டான், சாளம்பன், நாகச்செடி ஆகிய மூன்று கிராமங்களில் 34 வீடுகளும், முசலி பிரதேச செயலகப் பிரிவில் சவேரியார்புரம், கொக்குப் படையான் ஆகிய இரண்டு கிராமங்களில் 24 வீடுகளும், மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் விடத்தல்தீவு, ஆண்டான்குளம், பாப்பாமோட்டை, ஈச்சிலவத்தை ஆகிய நான்கு கிராமங்களில் 87 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீடும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இந்த வீடுகளை அமைக்கும் பணி தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சேவாலங்கா நிறுவனம் கிராம அபிவிருத்தி நிறுவனம், உலக தரிசன நிறுவனம் ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை வறிய கடற்தொழிலாளர் குடும்பங்கள், விதவைகளுக்கு நிகொட் திட்டத்தால் அமைக்கப்படவுள்ள வீடுகளின் நிர்மாணப்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (மோ)


# குறுகிய கால பயிற்சி நெறி!

மன்னார்

அபிவிருத்தி நன்கொடை திட்டத்தின் கீழ் தொழில் திணைக்களத்தின் நிதியுதவியுடன் மன்னார் மாவட்டத்தில் இளைஞர், யுவதிகளுக்கான மூன்று மாதகால குறுகியகால பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளன.

மன்னார் கணினி பூங்கா மண்டபத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் மரவேலை, வீட்டு மின்னிணைப்பு, கனிணிப் பயிற்சி, தையல், ஓட்டுவேலை போன்றன ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிக்காலத்தில் நாள் ஒன்றுக்கு 100 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (201)









கிளிநொச்சி - தருமபுரம் மகாவித்தியாலயத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா உரை நிகழ்த்துவதையும், மாணவ, மாணவிகளுக்கு சித்திரா குருகுலராஜாவால் பதக்கம் அணிவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# வர்த்தக நிலைய தூய்மைக்கு உரிமையாளர்களே பொறுப்பு!

## தமிழீழ சுகாதார பூநகரி பிரதேச இணைப்பாளர் அரவிந்தன்

பூநகரி

பூநகரி பிரதேசத்தில் காணப்படும் வர்த்தக நிலையங்களுக்கு அண்மையில் குப்பை கூழங்கள் நிறைந்தும், புற்கள் வளர்ந்ததாகவும் தூய்மையற்ற நிலையிலும் காணப்படுகின்றது.

எனவே, வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தங்கள் வர்த்தக நிலையங்களுக்கு அருகில் உள்ள புற்களை வெட்டி, குப்பை கூழங்களை எரித்தோ, புதைத்தோ தூய்மையாக்க வேண்டும் எனவும் - நிலையங்களின் அருகில் உள்ள குப்பை கூழங்களுக்கு அந்தந்த நிலையங்களுக்குரியவர்களே பொறுப்பாளிகள் என கருதப்படும் தவறும் பட்சத்தில் சுற்றாடல் சுகாதார ஊட்டத்துக்கு அமைவாக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தமிழீழ சுகாதார சேவையின் பூநகரி பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் தெரிவித்தார்.

# தனியார் கல்வி நிலையம் தீக்கிரை

பூநகரி

பூநகரி - ஜெயபுரம் பகுதியில் தனியார் கல்வி நிலையம் கடந்த புதன் கிழமை விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி மாணவர்களுக்கு சேவையாற்றி வந்த தனியார் கல்வி நிலையமே தீமூட்டி எரிக்கப்பட்டது. (கு)

# மணற்காடு - குடத்தனை பிரதேசத்தில் இராணுவத்தினரால் புதிய படைத்தளம்

வடமராட்சி கிழக்கு

மணற்காடு - குடத்தனை சவுக்கங்காடுகளில் இராணுவம் பாரிய படைத்தளமொன்றை அமைத்து வருகின்றது.

டாங்கிகள், கவச வாகனங்கள் [illegible] நிற்கக்கூடியவகையில் இந்தத் [illegible] பிரமாண்டமாகத் படைத்தளம் [illegible] தெரிய அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, வடமராட்சி மற்றும் தென்மராட்சியின் முன்னரங்க பாதுகாப்பு அரண்களை நோக்கி பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதுடன், கனரக ஆயுதங்களும் அந்தப் பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் உள்ள பனை, தென்னை மரங்களைத் தறித்து தமது காவலரண்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையிலும் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தின் தற்போதைய நடவடிக்கைகள் அவர்கள் மீண்டுமொருபோருக்கான, முழுமையான தயார்படுத்தல்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இடம்பெயர்ந்து வருவோரின் நலனை கவனிக்க அதிகாரிகள் செயலணிக்குழு நியமிப்பு!

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்துக்கு பிற மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து வருவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இவர்களது சேமநலன், தங்குமிடம், புனர்வாழ்வு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கென உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய செயலணிக் குழுவொன்றை நியமித்து பளை, பூநகரி, கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலகங்களூடாக இடம்பெயர்ந்துள்ளவர்களின் நலன்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வன்னிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் சமைத்த உணவு மற்றும் ஏனைய பராமரிப்பு உதவிகள் போன்றன மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்

மன்னார்

சமூக சேவைகள் அமைச்சின் நிதியுதவியுடன் பாடசாலை செல்லும் மாணவர்களின் கண் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வு மன்னார் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி.ஸ்ரனிடீமெல் குரூஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 40 பேருக்கு கண்ணாடி வழங் கப்பட்டது. ஒவ்வொரு கண்ணாடியினது பெறுமதியும் 3 ஆயிரம் ரூபா என்பதும் குறிப்பிடத்தக்கது. (201)

## அம்புலன்ஸ் வாகனம் பழுதடைந்த நிலையில்

பூநகரி

பூநகரி - வேராவில் வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனம் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது.

பழுதடைந்த இந்த வாகனம் திருத்த வேலைக்காக கொண்டு சென்றும் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் வேராவில், கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, பாலாவி கிராமமக்கள் மேலதிக சிகிச்சையைப் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என மக்கள் விசனம் தெரிவித்தனர். (கு)

## அடிக்கல் நாட்டுவிழா

மன்னார்

மன்னார்- நானாட்டான் மத்திய மருந்தக மகப்பேற்று விடுதிக்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதற்கான நிதியை உலக தரிசன நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மோ)

## காலாவதியான பொருட்கள் அழிப்பு

பூநகரி

தமிழீழ சுகாதார சேவையினரால் கடந்த 22 ஆம் திகதி பூநகரி பிரதேசத்தில் உள்ள உணவகங்கள், பல்பொருள் வாணிபங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, காலாவதியான பெருந்தொகையான உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டன என தமிழீழ சுகாதார சேவையின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் தெரிவித்தார். (கு)

# தமிழர் தாயகப் பகுதியை மீட்டெடுக்க அனைவரும் போர்பயிற்சி பெறவேண்டும்

## அரசியல் துறையைச் சேர்ந்த புலிமாறன் தெரிவிப்பு

கிளிநொச்சி

தமிழர் தாயகப் பகுதிகளை மீட்கவும், பாதுகாக்கவும் தமிழ் மக்கள் அனைவரும் ஆயுதப் பயிற்சி மற்றும் போர்ப்பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறையைச் சேர்ந்த புலிமாறன் தெரிவித்தார்.

கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரி வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கிளிநொச்சி நகரப் பகுதியிலுள்ள பொது அமைப்பின் பிரதிநிதிகளுக்கான அரசியல் கருத்தமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசு யுத்தத்தை தமிழ் மக்கள் மீது திணிக்கவே முயல்கின்றது. அதற்கான முனைப்பில் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் எமது பிரதேசங்களைப் பாதுகாக்கவும், ஏனைய தமிழர் தாயகப் பகுதிகளை மீட்கவும், தமிழீழ தேசியத் தலைவரின் கரத்தை வலுப்படுத்தவும் முன்வர வேண்டும்.

இந்த வகையில் பொது அமைப்புகள், மக்களைத் தயார்ப்படுத்த வேண்டும்.

இன்றுள்ள சூழ் நிலையை உணர்ந்து வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஏனைய பகுதிகளிலும் வயது வேறுபாடின்றி எமது அமைப்பில் மக்கள் போராளிகளாக இணைந்து வருகின்றனர்.

மாவீரர்களும், கரும்புலி மாவீரர்களும் கொண்ட இலட்சியம் ஈடேற தேசியத் தலைவரின் வழியில் அனைவரும் அணிதிரள முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஓய்வுபெற்ற மருத்துவருக்கான பிரிவுபசாரமும், பாராட்டு விழாவும்

பூநகரி

பூநகரி - வேரவில் மருத்துவமனையில் கடந்த 21 வருடங்களாக கடமையாற்றி ஓய்வுபெற்ற மருத்துவருக்கான பிரிவுபசார விழாவும், பாராட்டுவிழாவும் வேரவில் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிராஞ்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ஐ. கேசவன் தலைமையில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற மருத்துவரான கந்தையா சிவபாதசுந்தரத்துக்கு வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி மக்களால் நினைவுப் பரிசாக தங்கச் சங்கிலியும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முழங்காவில் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழரசன், பிரதி சுகாதாரப் பணிமனைப் பொறுப்பாளர், துறைசார் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (கு)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

அழிவந்த செய்யினும் அன்பு அறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்

- திருக்குறள்-

## நமது நோக்கு

# இனியாவது புரிந்து கொள்ளட்டும்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் பிரதேசத்தின் மீது அரச படையினர் மேற்கொண்ட தாக்குதல் அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என்று, இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு வெளியிட்ட அறிக்கையை அரசாங்கம் நிராகரித்திருக்கிறது.

போர்நிறுத்த கண்காணிப்புக்குழு இரட்டை நாக்குடன் செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

கடற்படை, இராணுவம், விமானப்படை என்று முப்படைகளும் இணைந்து ஒரு பிரதேசத்தின் மீது தாக்குதல் நடத்தியதை யுத்தநிறுத்த மீறலாக குறிப்பிட்டது தவறான கருத்து என்று அரசு சொல்கிறது என்றால், இதைவிட மோசமான புரட்டு வேறெதுவும் இருக்கமுடியாது.

போர்நிறுத்த உடன்பாட்டின் விதிகளுக்கமைய எந்தவொரு தரப்பும், எதிர் தரப்பின் மீது தாக்குதல் நடத்தக்கூடாது. ஆனால், அரசாங்கத்தரப்பு தமது முப்படைகளை ஏவி சம்பூரில் தாக்குதல் நடத்தியது.

இதை ஜனாதிபதி உள்ளிட்ட அனைவருமே ஏற்றுக்கொள்கின்ற போதும், அந்தத் தாக்குதலை போர் நிறுத்த மீறல் இல்லை என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

தமிழர் குடியிருப்புக்களைத் தாக்கி 15க்கும் அதிகமானோரைக் கொன்றுவிட்டு அதை ஒரு போர் நிறுத்தமீறல் அல்ல என்று குறிப்பிடும் அளவுக்கு அரசாங்கம் யுத்த நிறுத்தத்துக்கு மதிப்பு(?) கொடுத்திருக்கிறது.

மேலும், புலிகளைக் கண்காணிப்புக்குழு கண்டித்தால் அதைத்தூக்கிப்பிடித்து உலகெங்கும் பிரசாரம் செய்யும் அரசு - தம் மீதான கண்டனம் வந்தவுடன் மட்டும் அதை தூக்கி எறிவதும், நிராகரிப்பதும் எந்த வகையில் பொருந்தும்.

அதேவேளை, கண்காணிப்புக்குழுவின் தலைவர் சம்பூர் பிரதேசத்தைப் பார்வையிட்டுத் திரும்பியதும் - சம்பூரில் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படவில்லை. புலிகள் இலக்கு களே தாக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்ததாக அரச ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

தன் மீதான தவறுகளை மறைத்துக்கொள்வதற்கு யாருடைய பெயரிலும் பொய்யான அறிக்கைகளை வெளியிடும் அளவுக்கு அரசு கீழ்த்தரமாக நடந்து கொள்கிறது.

அதுமட்டுமின்றி, சம்பூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் தாக்குதல் நடத்தச்சென்ற கிபிர் ஜெட் விமானம், மூதூர் இறங்குதுறையில் தாக்குதல் மேற்கொண்டு அப்பாவி முஸ்லிம்களை கொன்றுவிட்டு அந்தப்பழியையும் புலிகள் மீதே போட்டது.

புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் தான் முஸ்லிம்கள் காயமுற்றதாக அரசு நீலிக்கண்ணீர் வடித்தது.

ஆயினும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இந்தச் செய்தியை நிராகரித்திருந்தது. போர் நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்து நான்கு வருடங்களாகி விட்ட நிலையில் அரசு மிக மோசமான போர் நிறுத்த மீறலை செய்து விட்டு-


அதையே மூடிமறைக்க முயல்வது அதன் இப்போதைய போக்கை வெளிக்காட்டுகிறது. சர்வதேசத்தின் கண்களுக்குத் தெரியும் வகையில் நடந்த தாக்குதலை கண்டித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவையே தூஷிக்கும் அளவுக்கு இந்த அரசு சென்று கொண்டிருக்கிறது என்றால்-

வடக்கு-கிழக்கில் நடைபெறும் தாக்குதல்களை போர்நிறுத்த மீறல்களாக ஏற்றுக்கொள்ளவா போகிறது?

இந்த இடத்தில் தான் சர்வதேசசமூகம் சிங்கள பேரினவாத அரசின் கோரமுகத்தையும், அது போடும் வேஷத்தையும் புரிந்து கொள்ளவேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



# திருமலை தமிழர் இடப்பெயர்வு யூ.என்.எச்.சி.ஆர் கவலை!

திருகோணமலை—

திருகோணமலையில் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்துள்ளமை குறித்து ஐ.நா. அமைப்பான யூ.என்.எச்.சி.ஆர் கவலை தெரிவித்தது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் -

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளமை கவலை அளிக்கிறது.

இராணுவத்தினர் மூதூர் பகுதியில் இரு நாட்கள் தொடர்ச்சியாக குண்டுத் தாக்குதல்களை நடத்தியமை முடிவுக்கு வந்துள்ளது. ஆனால், 7ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையான மக்கள் சம்பூர் பிரதேசத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

மூதூர் தாக்குதல்களை அடுத்து ஏப்ரல் 21 ஆம் திகதி 8 ஆயிரத்து 500 பேர் இடம்பெயர்ந்தனர்.

முன்னதாக, ஏப்ரல் 12 ஆம் திகதி குண்டு வெடிப்பையடுத்து 16 பேர் கொல்லப்பட்டனர். 3ஆயிரம் பேர் இடம்பெயர்ந்தனர்.

இடம் பெயர்ந்துள்ள மக்கள் பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்தோரில் பலர் பகல் நேரங்களில் தங்கள் வீடுகளிலும், இரவு நேரங்களில் இடப்பெயர்வு இடங்களிலும் வாழ்வைக் கழித்து வருகின்றனர்.

ஐ.நா.அமைப்புக்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் அண்மைய இடப்பெயர்வு தொடர்பாக ஆழ்ந்த கவலை கொள்வதாக இலங்கைக்கான யூ.என். எச்.சி.ஆர் பிரதிநிதி அமின் அவாட் தெரிவித்தார்.

திருகோணமலையில் பாதைகள் திறக்கப்பட்ட நிலையில் நிலைமையை பார்வையிட ஐ.நா.குழுவினர் செல்லவுள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்—

இந்த வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனால் வலி. மேற்கு பிரதேசத்திலுள்ள சமூக மட்ட அமைப்புக்களுக்கும், பாடசாலைகளுக்கும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி தொலைபேசி இணைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், சுழிபுரம் கலைவாணி சனசமூக நிலைய கட்டட திருத்த வேலைக்கு 25 ஆயிரம் ரூபாவும், அராலி ஊராத்தி செந்தமிழ் சனசமூக நிலையத்துக்கு தள்பாடங்கள் கொள்வனவு செய்ய 25 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்—

நல்லூர் பிரதேச செயலகத்தில் நாளை நடைபெறவிருந்த அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கணேஷ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவிருந்த இந்தக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும், கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் நல்லூர் பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்—

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட மூன்று பாடசாலைகளில் அதிபர் பதவிக்கான வெற்றிடங்கள் உள்ளதாகவும், தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார்.

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, ஊரெழு கணேசா வித்தியாலயம், நல்லூர் ஞானோதயா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளிலுமே அதிபர் பதவி வெற்றிடம் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிவராம் கொலையாளிகள் தண்டிக்கப்படாததற்கு கவலை

கொழும்பு—

மாமனிதர் சிவராம் கொலையாளிகள் தண்டிக்கப்படாதது குறித்து சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக எல்லைகள் கடந்த ஊடகவியலாளர்கள் அமைப்பு, சர்வதேச ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பு, சிறிலங்கா சுதந்திர ஊடக இயக்கம் ஆகியவை வெளியிட்டுள்ள அறிக்கையில் -

ஓராண்டுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட சிவராம் படுகொலையின் விசாரணைகளில் முடக்கம் நீடித்து வருவது குறித்து கவலை கொள்கிறோம்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்ட போது இந்த வழக்கு விசாரணை விரைவில் முடிவடைந்து விடும் என்று நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால், அதன் பின்னர் உரிய விசாரணைகள் நடைபெறவில்லை.

இலங்கையின் ஊடகவியலாளர்கள் குறிப்பாகத் தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் சிவராம் படுகொலை வழக்கு விசாரணையை விரைந்து நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலிகளை அகற்றுமாறு கடற்படை மக்களை வற்புறுத்து

யாழ்ப்பாணம்—

ஊற்காவற்துறை, பொன்னாலை போன்ற பகுதிகளில் வீதிகளின் இருமருங்கிலும் உள்ள வேலிகளை வெட்டி அகற்றுமாறு கடற்படையினர் மக்களை வற்புறுத்தி வருகின்றனர். இதனால் மக்கள் மத்தியில் பெரும் அச்சநிலை தோன்றியுள்ளது.

பொன்னாலை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலும், சுருவில், புளியங்கூடல், நாரந்தனை, கரம்பொன், ஊர்காவற்துறை போன்ற பகுதிகளில் வீதிகளில் உள்ள வேலிகளை கடற்படையினர் நேரடியாக நின்று வெட்டி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்படையினரின் இத்தகைய செயற்பாட்டால் காணிகளுக்கு அமைக்கப்பட்ட வேலிகள் வெட்டி அகற்றப்படுவதால் காணியில் உள்ள பயன்தருமரங்கள் மற்றும் வீட்டுத்தோட்டப் பயிர்களை கால்நடைகள் நாசமாக்கி வருகின்றன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## பொதுநோக்கு மண்டப திறப்பு விழா

யாழ்ப்பாணம்—

நயினாதீவு தெற்கு நியாப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டப திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நயினாதீவு தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ச.பரஞ்சோதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக நியாப் திட்டப் பணிப்பாளர் க.பாலகிருஷ்ணன், வேலணை பிரதேச செயலர் நந்தகோபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் சமூக வலுவூட்டாளர் சிறி நாகேஸ்வரன் வரவேற்புரையையும், கிராம உத்தியோகத்தர் இ.குலசிங்கம் ஆரம்ப உரையையும், கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் த.அமிர்தராசா நன்றியுரையையும் நிகழ்த்துவர்.

# ஊடகவியலாளர்கள் குடாநாட்டில் எதிர்நோக்கும் நெருக்கடிகள்

யாருடைய தயவுமின்றி நெருக்கடிகளுக்கு
மத்தியில் குடா நாட்டிலிருந்து உண்மைச்
செய்திகளை வழங்கும் ஊடகவியலாளர்கள்
தான் துப்பாக்கி தாரிகள்
அடுத்த இலக்காக இருக்குமோ?
என்ற அச்சம் குடாநாட்டு ஊடகவியலாளர்
மத்தியில் காணப்படுகின்ற
தென்றால் அது உண்மையே!

யாழ் குடாநாட்டில் ஊடகவியலாளர்கள் மீதான இராணுவ நெருக்கடிகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன.

குடாநாட்டில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அல்லது தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றாலோ சம்பவ இடங்களுக்கு ஊடக வியலாளர்கள் செல்ல முடியாத நிலையே உள்ளது.

ஆனாலும் குடாநாட்டுப் பத்திரிகையாளர் கள் மிகுந்த சிரமங்களுக்குள்ளான நிலையில் உண்மைச் செய்திகளை ஊடகங்கள் மூலம் வெளிக் கொணருவதற்கு தயங்குவதில்லை. அதனால் தான் குடாநாட்டு ஊடகவியலாளர் கள் மீதான இராணுவ நெருக்கடிகள் அதிகரிக்கப் பட்டிருக்கின்றன.



குடா நாட்டில் தற்போது அதிகரித் துள்ள படுகொலை கள், தாக்குதல் கள், பொதுமக்கள் மீதான நெருக்கடி கள் போன்றவற்றை உள் நாட்டு, வெளிநாட்டு ஊடகங்க ளூடாக சர்வதேசத்துக்கு தெரியப்படுத்துவதில் குடாநாட்டு ஊடகவியலாளர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.

தென்னிலங்கையில் உள்ள ஊடகவியலாளர்களது சுதந்திரத்தை ஒப்பிடுகையில் யாழ்-குடாநாட்டு ஊடகவியலாளர்கள் எந்த வொரு பாதுகாப்பு உத்தரவாதமுமில்லாத நிலையிலே செயற்படுகின்றனர்.

குறிப்பாக- கன்னாதிட்டிச் சந்திப் பகுதியில் இராணுவ வாகனமொன்று பொது மகன் ஒருவரைக் காயப்படுத்தி விட்டு தப்பி யோடியது. இந்தச் சம்பவம் நீதிமன்றத்துக்கு வந்த போது சம்பந்தப்பட்ட படையினரை இனங் காண உதவியது - அந்தச் சம்பவத்தை புகைப்பட மெடுத்த ஊடகவியலாளர் ஒருவரது புகைப் படமே!

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கிலே இராணுவத் தினரின் கறுப்புத் துணி விவகாரமும் வெளியே வந்தது.

அதாவது குடாநாட்டு வீதிகளிலே முகத் தைக் கறுப்புத் துணி யால் கட்டியபடி இராணுவத் தினர் கடமை யில் ஈடுபட்டு வரு கின்றனர். இந்த விபத் துச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட படையினர் முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டியிருந்த தால் அடையா ளங் காண முடி யாமல் இருந்தது.

இதனால் குடாநாட்டு வீதிகளில் கடமையில் ஈடுபடும் படையினர் முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டக் கூடாது என யாழ் மாவட்ட மேலதிக நீதிவான் உத்தரவு பிறப்பித் திருந்தார்.

எனவே, பலத்த நெருக் கடிகளுக்கு மத்தி யிலும் குடாநாட்டு ஊடகவியலாளர்கள் செயற் பட்டு வருகின்றனர்.

இதே வேளை அண்மையில் வெலிக் கந்தையில் வைத்து கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் அமைதிப் பேரணி யொன்று நடைபெற்றபோது அந்தச் சம்பவத்தை புகைப்படமெடுத்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர்களை குறிவைத்து இராணுவத் தினர் அதிரடி நட வடிக்கைய மேற் கொண்டனர்.

அதுவும் அமைதிப் பேரணி யாழ். மாவட்ட செயலகத்தை அண்மித்துக் கொண்டிருந்த வேளை பவள் கவச வாகனங்கள் சகிதம் வந்த இராணுவத்தினர் அங்கிருந்த ஊடகவியலாளர்களை சூழ்ந்து அவர்களது புகைப்படக் கருவிகளைப் பறித்தெடுக்கவும் முயன்றனர்.

இந்தச் சம்பவத்தில் வலம்புரி பத்திரிகையாளரான திலீவின்பன் என்பவரைச் சூழ்ந்து தாக்கியதோடு தீவிர விசாரணைக்கும் உட்படுத் தினர். கைது செய்து இழுத்துச் சென்று இராணுவ வாகன மொன்றுக்குள் ஏற்ற முனைந்த வேளையில் மற்றைய ஊடக வியலாளர்கள் இராணுவத்தின ரோடு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு பத்திரிகையாளர் அடையாள அட்டையைக் காட்டி பத்திரிகையாளர் என்பதை அடையாளப்படுத்திய பின்னரே அவரை விடுவித்தனர்.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் ஊடகவியலாளர்களை இராணுவத்தினர் வீடியோப் பதிவு செய்து மிரட்டியுள்ளனர். எனவே இவ் வாறான பத்திரிகை யாளர்களுக்கு எதிரான காட்டு மிராண்டித்தனமான நடவடிக் கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் அண்மையில் செய்தி சேகரிப்பதற்காக யாழ்ப்பாணம் சிறைச்சாலையை படமெடுத்த யாழ் தினக்குரல் செய்தியாளர் ஒருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

அதன் போது அவர் தனது ஊடகவியலாளர் அடையாள அட்டையைக் காட்டி வாதாடிய பின்னரே விடுதலை செய்தனர்.

இதே வேளை அண்மையில் புத்தூரில் படைமுகாம் அருகே 5 இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து அங்கே சென்ற ஊடகவியலாளர்களை இராணுவத் தினர் சடலங்கள் இருந்த தரவைப் பகுதிக்கு முதலில் செல்ல அனுமதிக்கவில்லை.

படை முகாம்களுக்கு அருகே மிகவும் கொடூரமான சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் இந்த இளைஞர்கள் ஐவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

எனவே இந்த உண்மை வெளியல் வரக் கூடாது என்பதற்காக முதலில் ஊடகவியலாளர்கள் இராணுவத்தினருடன் கடுமை யான வாக்குவாதத்தில் ஈடுபட்டு உயிரைத் துச்சமாக மதித்தே இந்தச் சம்பவம் இடம் பெற்ற இடத்துக்குச் சென்று செய்திகளைச் சேகரித்தனர்.

யாழ் குடாநாட்டில் நடைபெறும் சம்பவங் களை உடனுக்குடன் வெளியே கொண்டு வரும் ஊடகவி யலாளர் களைக் குறி வைத்து இராணு வத்தினர் செயற்பட்டு வருகின்றமை கண்கூடு!

அண்மைக் காலமாக யாழ் குடா நாட்டில் படுகொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. 10 நாட்களில் மட்டும் 21 பேர் படுகொலை செய்யப்பட்டதோடு மட்டுமில்லாமல் கொலைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இந்தப் படுகொலைகள் ஏன் எதற்காக என்றன்றி தொடர்ந்து கொண்டு செல்லும் நிலையில் குறிப் பாக வர்த்தகர்கள், ஓட்டோச் சாரதிகள் எனக் குறிவைக்கப் படுகின்றனர்.

யாருடைய தயவுமின்றி நெருக்கடிகளுக்கு மத்தியில் குடா நாட்டிலிருந்து உண்மைச் செய்தி களை வழங்கும் ஊடகவியலாளர் கள் தான் இந்த துப்பாக்கி தாரிகளின் அடுத்த இலக்காக இருக்குமோ?

என்ற அச்சம் குடாநாட்டு ஊடக வியலாளர் மத்தியில் காணப்படு கின்றதென்றால் அது உண்மையே!

**தர்சன்**

## தரணியே போற்றும் வர்க்கம்

ஒரு நாள் வாழ்வில் திருநாள் ஆகும்
உலகம் முழுதும் உவகை கொள்ளும்
இருளை அகற்றி ஒளியைக் கொடுக்கும்
இந்நாள் தானே பெருநாள் என்போம்
பெருமை யோடு பணியைச் செய்தோம்
பெற்ற பயனோ அதிகம் இல்ல
கருணை இல்லா மனிதர் கூட்டம்
கண்டு கொள்ளா வறுமை வாழ்வு
தருணம் வருமே மலரும் வாழ்வு
தரணி போற்ற வாழ்வோம் நாமே

கவிஞர் வ.யோகானந்த சிவம்

## சிவப்பான கதை

மேதினம் மேதினி எழுந்தது
மேலவர் தொழிலாளர் என்றது
ஏதினும் விடிவுமே இல்லையா
எங்களின் தமிழீழ நாட்டுக்கு!

நூற்றாண்டு முன்னாக சிக்காகோ
நகரத்தில் வெடித்த புரட்சியால்
தோற்றனர் பேலைக் காரர்கள்
தோன்றியது எட்டுமணி வேலைநாள்!



அமெரிக்க சிக்காகோ நகரத்தில்
அணிவந்த தொழிலாளர் கூட்டத்தை
எமனாகத் தோன்றிக் குண்டர்கள்
எதிர் வந்து சுட்டும் வீழ்த்தினர்!

தொழிலாளர் சிந்திய ரத்தத்தில்
தோய்ந்த வெண்கொடி சிவப்பான
அழியாத வரலாறு கூறும் நாள்
அகிலத்தில் நிலைத்த மேதினம்!

நாளொன்று பன்னிரு மணிநேரம்
நறுக்காக வேலை கொள் நியதியை
நீலத்தில் அணிவந்த தொழிலாளர்
நீக்கிப்புது வரலாறு படைத்த நாள்!

மூலபாரதி

## மேதினி போற்றும் "மே" தினம்



ஏதினி அடிமை வர்க்கம்
எனக்குரல் உயர்த்தி வந்த
'மேதினம்' வாழ்க! மண்ணில்
மேலவர் கீழோர் தம்மை
ஆதிக்கம் செய்து வந்த
ஆணவம் அழிந்த தெந்நாள்?
மேதினி போற்றி வாழ்த்தும்
'மே' நாளே அந்நாள் அன்றோ?

வியர்வையின் துளிகளே! உம்
விழாநாளே மேநாள் கைகள்
உயர்வினை உரத்துக் கூறும்
ஒப்பற்ற நாளே இந்நாள்
அயர் வின்றி உழைப் போனுக்கே
ஆயிரம் உரிமை மீட்ட
உயர்வான மேல்நாள் மேநாள்
ஒப்பிலா அந்நாள் வாழ்க!


விழலுக்கு நீரைப் பாய்ச்சும்
வேதனை ஒழிய வேண்டும்
உழைப்பவன் உயர வேண்டும்
ஒற்றுமை தழைக்க வேண்டும்
நாட்டினில் சமூதாயத்தில்
நலநீதி கிடைப்பதற்குத்
தீட்டிடும் திட்டம் வேண்டும்
சிந்தனை மாற வேண்டும்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

## விடுதலைகாணட்டும் இந்நாள்

உழைப்பவர் கரம் நீட்டி
இன்னல்கள் போக்கிட எழுந்த
தமிழர் திருநாளில்
விடுதலையை வரவேற்று நின்று
எழுச்சி கொள்ளும் இன் நாளில்
எல்லோரும் சேர்ந்து
கைப்பிடித்த
இறுக்கத்தின் இடைவெளி இல்லா
பிணைப்பில் உடல் மூச்சுக் காற்றும்
சேர்ந்து கொண்ட
வெளிப்பாடுகளுக்குள்
பரந்த வெளி ஆனாலும்
ஊதித் தள்ளி விட முடிகிற
ஒற்றுமையின் கூட்டமைப்புக்குள்
இன்றைய நாளின் தேடலில்
விடுதலை காணட்டும்







புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் ஒரு பகுதி! (படம்:- என்.ரி.ரி.)



வாகனத்துடன் பற்றி எரியும் கருணாகுழு முகாம் (படம்:- என்.ரி.ரி.)



தாக்குதலுக்கு திட்டமிடும் புலிகள் (படம்:- என்.ரி.ரி.)



தாக்குதல் முடிந்து திரும்பும் புலிகள் (படம்:- என்.ரி.ரி.)







பொலநறுவ வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் கருணாகுழுவினர். (படங்கள்:- ஏபி)

# மேதினத்தை துக்கநாளாக கடைப்பிடிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளை வன்கரம் கொண்டு சிங்கள பேரினவாதம் அடக்கமுற்படுவதை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்ட - தொழிலாளர் தினமான இன்று அனைவரையும் கறுப்புப்பட்டி அணிந்து துக்கத்தை வெளிப்படுத்துமாறு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி சங்கங்களின் சமாசம் அறைகூவல் விடுத்துள்ளது.

அனைத்துலக மேதினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியத்தை பலப்படுத்தி தொழிலாளர் வாழ்வுரிமைகளை வென்றெடுக்க கூட்டுறவாளர்களாகிய நாம் ஒன்றுபட்டுச் செயற்படுவோம்.

பாசிசவாத சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்த்தேசியத்தை அடக்கி ஒடுக்கி தமது மேலாண்மையை தக்கவைத்துக்கொள்ளவே விரும்புகின்றனர். சர்வதேச ஆதரவுடன் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் கூட தமிழர் தாயகத்தை சிதைக்கவே முயல்கின்றனர் என்பது திருமலை, மூதூர் படுகொலைகள் மூலம் தெரிய வருகிறது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை புறந்தள்ளி இன வன்முறைகளை ஏவிவிட்டு தமிழ் மக்களைப் படுகொலை செய்வது ஒன்றுதான் அரசின் தீர்வாக இப்போது இருக்கிறது.

நாம் முந்திக்கொள்வோம். அரசின் போர்வெறியைத் தகர்ப்போம். தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் தலைமையின் கீழ் அணிதிரள்வோம். தமிழ்பேசும் மக்கள் தமது நியாயபூர்வமான அரசியல் உரிமைகளை பெறவேண்டுமாயின் அனைவரும் ஆயுதம் ஏந்துவோம். அது ஒன்று தான் பிரச்சினைக்கு தீர்வுகாண வழிவகுக்கும். சர்வதேசத்துக்கு முன்னால் தமிழ்த்தேசிய கூட்டுறவுத் தொழிலாளர்களின் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்.

யாழ்.குடாநாடு சிங்கள ஆயுதப் படைகளின் வன்முறைக்களமாக மாறியுள்ளது. மே நாளை எழுச்சியுடன் முன்னெடுக்கமுடியாத நிலை தோன்றியுள்ளது.

சிங்கள பேரினவாத அராஜகங்களின் கொடுங்கோன்மைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக எமது நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை வன்கரம் கொண்டு அடக்கமுற்படுவதை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டும் வகையில் மே நாளன்று அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து எமது துக்கத்தை வெளிப்படுத்துமாறு வேண்டுகிறோம்.

ஆகவே, அனைத்துக் கூட்டுறவு சங்க நிர்வாகிகள், பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரும் இதனைக் கருத்திலெடுத்து அமைதியான வழியில் மே நாளை முன்னெடுக்குமாறு யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள் விடுக்கிறதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கண்காணிப்புக்குழு குற்றச்சாட்டு அரசுக்கு ஆச்சரியமளிக்கிறதாம்!

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

கொழும்பு —

திருகோணமலை - சம்பூரில் முப்படைகளும் நடத்திய தாக்குதல் அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்ட கருத்து ஆச்சரியமளிப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சரும் பாதுகாப்பு பேச்சாளருமான கேகெலிய ரம்புக்வெல - கண்காணிப்புக்குழுவினரின் கருத்து ஆச்சரிமளிக்கிறது எனத் தெரிவித்தார்.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான தாக்குதலைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மேலதிக தாக்குதல்களை நடத்தாமல் தடுக்கவே முப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டது. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அவர் கூறினார்.

இதேவேளை - கண்காணிப்புக் குழுவுக்கு கண்டனம் தெரிவித்து ஜே.வி.பி.யின் விமல் வீரவன்ச கூறியதாவது -

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தெனில் எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் மேற்கொள்ளலாம். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு முன்னால் எந்தவொரு ஆவணமும் செயலற்றதுதான்.

அரசியல் யாப்பைவிட வேறெந்த ஒரு ஆவணமோ ஒப்பந்தமோ முக்கியமல்ல. நாட்டின் பிரதேச ஒற்றுமையையும் இறையாண்மையையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை. இத்தகைய அறிக்கைகளை கண்காணிப்புக்குழு வெளியிட்டால் அவர்கள் சொந்த நாட்டுக்குப் போய் வேறு பணிகளைத்தான் பார்க்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கும் அரசாங்க சமாதான செயலகத்துக்கும் இடையில் இன்று பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இதன்போது திருகோணமலை தாக்குதல் ஒரு அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பாக விவாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பதில் இராணுவத்தளபதியாக எவரும் நியமனம் இல்லை!

கொழும்பு —

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா குணமடைந்து வருவதால்- பதில் இராணுவத் தளபதியாக எவரும் நியமிக்கப்பட வாய்ப்பில்லை என கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவ உயர் அதிகாரிகளை ஆதாரம் காட்டி வெளியிட்டுள்ள இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பதில் இராணுவத்தளபதியை நியமிப்பதற்கு தேவை ஏற்படவில்லை.

இராணுவத்தில் இரண்டாம் நிலை தளபதியான மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி அனைத்து பொறுப்புகளையும் ஏற்றிருக்கிறார்.

சரத்பொன்சேகா மீதான தாக்குதலையடுத்து - கிழக்குப்பிராந்தியத்துக்கான நடவடிக்கைத்தளபதியாக மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி நியமிக்கப்படவிருந்தமை தடைப்பட்டது.

அதேவேளை, இராணுவத் தலைமையகத்தின் மீதான தாக்குதலையடுத்து எந்த நிலையையும் எதிர்நோக்குவதற்கான திட்டங்கள் குறித்து படைத்தளபதிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

அதேவேளை தற்காலிகமாக இராணுவத்தளபதி ஒருவர் நியமிக்கப்படத் தேவையில்லை என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணுவத்தளபதி ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார். மெதுவாகவே இவர் குணமடைந்து வருகிறார்.

அடிவயிற்றில் ஏற்பட்ட பாரதூரமான காயம் குணமடைய நீண்ட காலம் எடுக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கான நடவடிக்கைத் தளபதியாக தற்காலிகமாக மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளதான செய்தியும் தவறானது என அதில் குறிப் பிடப்பட்டுள்ளது.

# ஊரெழுவில் கிரனேட் வீச்சு இராணுவச் சிப்பாய் காயம்!

யாழ்ப்பாணம் —

ஊரெழுவில் இராணுவத்தினர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஊரெழு திலீபன் வீதியில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது நேற்றுக் காலை 10.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன் போது இராணுவ சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பு செய்திகள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஊரெழு உள்ளிட்ட பகுதிகள் எங்கும் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதோடு -

வீடு வீடாக இராணுவத்தினர் கடுமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (82)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மினிபஸ் நடத்துனர் யாழ்.நகரில் சுட்டுக்கொலை



யாழ்ப்பாணம் —

யாழ்.நகரப் பகுதியில் தனியார் பஸ் நடத்துனரான இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த ஜோசெப் பிரகாஸ் (வயது 21) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

யாழ்.நகரில் மின்சார நிலைய வீதியிலுள்ள தனியார் பஸ்தரிப்பிடத்தில் நேற்றுக்காலை 11.45 மணியளவில் மேற்படி நபர் நின்றுகொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பஸ் தரிப்பிடத்தில் நின்ற பொதுமக்கள் சிதறியோடியதால் யாழ்.நகரப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதோடு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

# பொலித்தீன் பையில் கட்டப்பட்ட மனிதத் தலை கண்டெடுப்பு!

## வவுனியாவில் பரபரப்புச் சம்பவம்

வவுனியா —

வவுனியாவில் ஈ.பி.டி.பியினரின் முகாமுக்கு அருகே பொலித்தீன் பையொன்றில் கட்டப்பட்ட நிலையில் மனிதத் தலையொன்று மீட்கப்பட்டது.


மன்னார் - வவுனியா வீதியில் குருமன்காட்டுப் பிரதேசத்திலுள்ள ஈ.பி.டி.பியின் முகாம் அருகிலிருந்தே இந்த மனிதத் தலை கண்டெடுக்கப்பட்டது.

வவுனியா நகரில் பழ வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த தோணிக்கல் - வவுனியாவைச் சேர்ந்த லாசர் தர்மசேகரன் (வயது 24) என்பவரது தலையே இது என்று அவரது சகோதரர் அடையாளம் காட்டினார்.

லாசர் தர்மசேகரனது உடல் பட்டைக்காடு குளத்துக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

# திருடர் குழு சென்ற வான் சுதுமலையில் சிக்கியது!

## தாக்குதலில் ஒருவர் படுகாயம்



யாழ்ப்பாணம் —

மானிப்பாய் - சுதுமலை அம்மன் கோவிலடியில் வானொன்றில் சென்ற திருடர் குழுவொன்று பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு - தாக்கப்பட்டதில் திருடர் ஒருவர் கடுமையான காயங்களுக்குள்ளானார்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் சுதுமலை அம்மன் கோவில் பகுதியில் வானொன்றில் வந்த 12 பேர் அடங்கிய கொள்ளையர் குழுவொன்றை அந்தப் பகுதி பொதுமக்கள் மடக்கினர். அதன்போது ஒருவர் பிடிபட்டதைத் தொடர்ந்து ஏனையோர் தப்பியோடிவிட்டனர். அந்த நபர் கடுமையாகத் தாக்கப்பட்டார். மின் கம்பமொன்றில் கட்டிவிடப்பட்டார்.

நேற்றுக்காலை சம்பவ இடத்துக்குச் சென்ற மானிப்பாய் பொலிஸாரும் பெருமளவு இராணுவத்தினரும் வெட்டுக்காயங்களுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் காணப்பட்ட மேற்படி நபரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

மேற்படி நபர் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பிரிகேட் தலைமையகம் அருகில் மட்டக்களப்பில் கிரனைட் வீச்சு

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு 233ஆம் பிரிகேட் தலைமையகம் அருகில் நேற்று அதிகாலை 2 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

233 ஆம் பிரிகேட் தலைமையகம் அருகேயுள்ள சோதனைச் சாவடி மீதே அடையாளம் தெரியாத நபர்கள் இந்தக் கைக்குண்டை வீசினர். இதில் படைத்தரப்பில் ஒருவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த ஜி.பி.எஸ். அழகக்கோன் (வயது 38) என்ற இராணுவச் சிப்பாய் மட்டக்களப்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தாக்குதலுக்குள்ளான சோதனைச் சாவடி தபால் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து அந்தப் பகுதியில் பாரிய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையை படைத்தரப்பினர் மேற்கொண்டனர்.

## பெருமளவு...

கைப்பற்றப்பட்டுள்ளதுடன் பெருந்தொகையான வெடிபொருட்கள் அந்த இடத்திலேயே அழிக்கப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

# அல்லைப்பிட்டியில் இரு கடற்படையினர் படுகாயம்

யாழ்ப்பாணம் —

யாழ்.அல்லைப்பிட்டியில் கிளைமோர் தாக்குதலில் இரு கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

கடற்படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள அல்லைப்பிட்டியில் நேற்று மாலை 6.40 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் படுகாயமடைந்த இரு படையினர் ஹெலி மூலம் பலாலி இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வீதியோர ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரை இலக்கு வைத்து அல்லைப்பிட்டி சந்தியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

# இராணுவ முகாமிலிருந்து தொலைவிலே தாக்குதல்

## என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத் துணைஆயுத குழுவுக்கும் இடையில் நேற்று மோதல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிரதேசம் இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியில் இருந்து தொலைவில் அமைந்துள்ளதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினரின் தொடர்பு குறித்து சில ஊடகங்களால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளுக்கும், கருணா குழுவினருக்குமிடையில் மோதல்கள் இடம் பெற்றதாகக் கூறப்படும் பிரதேசம் வெலிகந்தையில் இருந்து 20 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சூரிய வெவ மற்றும் குருலுபொத்த கிராமங்களுக்கு வடக்கேயுள்ள காட்டுப்பகுதியாகும்.

எனவே, இந்தச் சம்பவத்தை இராணுவத்தினருடன் தொடர்புபடுத்துவதை முற்றாக மறுக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (01)

# பேசாலை அகதி முகாமில் ஏழு இளைஞர்கள் கைது

மன்னார் —

மன்னார் - பேசாலை அகதி முகாமிலிருந்து ஏழு தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

தலைமன்னார் - மன்னார் வீதி "பீ பேசாலை மீனவர் கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் இந்த முகாம் அமைந்துள்ளது. அந்தப் பிரதேசத்தில் நேற்றுக்காலை 5 மணி முதல் 8மணி வரை நடத்தப்பட்ட பாரிய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையின்போது இந்த ஏழு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

நேற்று இந்த அகதிகள் முகாமில் இருந்த ஒவ்வொருவரும் உடற்சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

பேசாலை இராணுவ சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் விசாரணை நடத்தப்பட்டபின்னர் தலைமன்னார் பொலிஸாரிடம் இந்த ஏழு பேரும் ஒப்படைக்கப்பட்டனர்.

இளைஞர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக அகதி முகாம் பொறுப்பாளர், மன்னார் அரச அதிபர் மற்றும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தலைமன்னார் பொலிஸார் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்தினார். 1990 ஆம் ஆண்டுகளில் முள்ளிக்குளம் மற்றும் கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பேசாலை அகதி முகாமில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (மோ)

# உரிமை கோரியது எல்லாளன் படை

யாழ்ப்பாணம் —

யாழ்.பஸ் நிலையத்தில் மினிபஸ் நடத்துனரான யோசெப் பிரகாஸ் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு, யாழ். மாவட்ட எல்லாளன் படை உரிமை கோரி அறிக்கை வெளியிட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் அண்மைய நாட்களில் நடைபெற்ற மூன்று சூட்டுச் சம்பவங்களையும் யாழ்.மாவட்ட எல்லாளன் படை தனது ஊடக அறிக்கை மூலமாக உரிமை கோரியிருந்ததுடன் தொடர்ந்து எதிரிகளுடனும், எதிரி புலனாய்வாளர்களுடனும், தமிழினத் துரோகிகளுடனும் இணைந்து செயற்படுபவர்களுக்கு எச்சரிக்கையையும் விடுத்திருந்தது.

ஆனாலும், அதனையும் மீறி கொழும்புத் துறையைச்சேர்ந்த யோசெப் பிரகாஸ் தனது செயற்பாட்டிலும், நடைமுறையிலும் மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை. அதனால் அவருக்கான எமது தீர்ப்பை வழங்கியுள்ளோம் என்பதை அறியத் தருகிறோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வாகனங்கள்...

எனினும், நேற்று தாக்கியழிக்கப்பட்ட கருணா குழுவினரின் முகாமிலிருந்து தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள் பயணஞ் செய்த வாகனங்கள் மீட்கப்பட்டன. கடத்தப்பட்ட புனர்வாழ்வுக்கழக தொண்டர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

அதேவேளை, வெலிக்கந்தவில் நேற்று கருணா குழுவினரின் முகாம்கள் தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்தின்போது வர்த்தகர் ஒருவர் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டார்.

வவுனியாவில் வைத்து கட்டத்தப்பட்ட பிரபல வர்த்தகர் ஒருவரையே விடுதலைப் புலிகள் மீட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட வர்த்தகர் புலிக்குட்டி என நம்பப்படுகிறது.

யூனிவேசல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
கருத்தரங்கு
இந்துநாகரிகம்
காலம் : 01.05.2006
திங்கள் காலை 8.30
▸▸ பகுதி : I, II முழுமையானது.
▸▸ வெளி மாணவரும் பங்குபற்றலாம்.
By: S.ஜெயக்குமார்
(2254)

# புலிகள் திடீர் பாய்ச்...

நேற்று அதிகாலை ஏககாலத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது

மட்டக்களப்பு - பொலனறுவ எல்லையில் வெலிக்கந்தவுக்கு 7 கிலோ மீற்றர் தொலைவில் காசங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் முகாம் அமைந்திருந்தது.

கண்டகாடு இராணுவ முகாமுக்கு அருகே இன்னொரு முகாமும், மேலும் இரு இராணுவ முகாம்களுக்கு இடையில் மூன்றாவது முகாமும் அமைந்திருந்தன.

இராணுவ,பொலிஸ் நிலைகளால் சூழப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த கருணாகுழு முகாம்களின் மீது விடுதலைப் புலிகளின் விசேட அதிரடிப் படையணி திடீர் பாய்ச்சல் நடத்தியது.

சுமார் ஒரு மணி நேரமாக இந்தத் தாக்குதல் நீடித்தது. இதன்போது கருணாகுழுவினருக்கு உதவியாக அருகிலுள்ள இராணுவ முகாம்களில் இருந்து கடுமையான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

எனினும், விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக இந்தத் தாக்குதலை நடத்தி கருணாகுழுவின் மூன்று முகாம்களையும் கைப்பற்றி தீயிட்டு அழித்தனர். இதன்போது இராணுவத்தினரால் வழங்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுதங்களும் தீயிட்டு அழிக்கப்பட்டன.

இந்தத் தாக்குதலில் கருணாகுழுவைச் சேர்ந்தவர்கள் 29 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 9 பேர் படுகாயமடைய, 5 பேர் உயிருடன் புலிகளால் சிறைபிடிக்கப்பட்டனர்.

படுகாயமடைந்த 9 பேரும் பொலனறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டோரில் கருணாவின் நீண்டகால மெய்க்காவலராக இருந்த - கருணா குழு முக்கியஸ்தரான கிருஷ்ணா மற்றும் வண்ணாளன் ஆகியோரும் அடங்குவதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மேலும் ஈ.என்.டி.எல்.எவ். முக்கியஸ்தர் ஒருவரும், வெளிநாடு ஒன்றில் இருந்து வந்திருந்த கருணாகுழு உறுப்பினர் ஒருவரும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்ததாகக் கூறப்பட்டது. எனினும் இந்தத் தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளை - கருணாகுழுவின் முக்கியஸ்தர்களான மார்க்கன், நிகசீலன், சின்னத்தம்பி போன்றோரும் இந்த முகாம்களிலேயே தங்கியிருந்ததாகவும் இவர்களின் கதி தொடர்பாக தெரியவரவில்லை என்றும் இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால், இவர்கள் இருவரும் மேற்படி முகாம்களில் இருக்கவில்லை என பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணியைச் சேர்ந்த ஒருவர் காயமுற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடைபெற்ற இடத்திலிருந்து கைப்பற்றிய ஆயுதங்களுடன் புலிகளின் அணிகள் பின்வாங்கி தளம் திரும்பியதை அடுத்து - இராணுவத்தினர் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்தி 15 சடலங்களை மீட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க உறுதிப்படுத்தினார். அத்துடன், நேற்றுக்காலை 9 மணியளவில் இந்தப் பிரதேசத்தில் புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் காசங்குளம் முகாமில் ஒன்றுகூடல் ஒன்றை நிகழ்த்திவிட்டு, மேற்படி மூன்று முகாம்களிலும் தங்கியிருந்தபோதே புலிகளின் தாக்குதலுக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின்போது பிடிபட்டவர்களிடம் விடுதலைப் புலிகள் விசாரணைகளை நடத்திவருவதாகவும் - இதன்போது கருணாகுழு பற்றிய முக்கிய விபரங்கள் வெளிவரக் கூடும் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட கருணா குழு உறுப்பினர்களில் 29 பேரின் சடலங்கள் தீவுச்சேனையில் வைக்கப்பட்டிருப்பதாக பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, இந்தத் தாக்குதலை முடித்துவிட்டுத் திரும்பிய புலிகள் புதைத்துவிட்டுச் சென்ற கண்ணிவெடிகளில், உதவிக்குச் சென்ற இராணுவ ட்ரக் வண்டிகள் இரண்டு சிக்கியதாக இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டன.

காசங்குளம் முகாம் நோக்கிச் சென்ற ட்ரக் வண்டிகளே கண்ணிவெடிகளில் சிக்கிச் சிதறியதாகவும், ஆனால் அரச தரப்பு இதனை மூடி மறைத்துவிட்டதாகவும் இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கிலிருந்து...

டைந்த எமது படகுகள் அங்கிருந்த எமது போராளிகளை ஏற்றிக்கொண்டு முல்லைத்தீவு நோக்கிப் புறப்பட்டன. நடந்ததைத் தெரிந்துகொண்ட கடற்படையினர் தாக்குதலை நிறுத்திவிட்டு எமது படகுகளுக்கு பாதுகாப்பு வழங்கியவாறு பின் தொடர்ந்தனர்.

தமது முகாம்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் வரை கடற்படைப் படகுகள் வழித்துணை வழங்கியிருந்தன. போராளிகளை ஏற்றிக்கொண்டுவந்த எமது படகுகள் இரவு பத்து முப்பது மணியளவில் திரும்பின என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.